உ

கடவுள் துணை.


# செந்தமிழ்.

தொகுதி—உரு] பிரபவ-ஹு ஆவணிமீ [பகுதி—௧௦.

Vol. XXV. August–September–1927. No. 10.


## *கம்பர்.

இலக்கியப்பயிற்சியும் கவிதானுபவமும் சர்வகலாசாலைகளிற் குன்றி வருகின்றன என்று பரிதாபத்தோடு ஸர் எட்மண்டு கோஸ் என்ற ஆங்கிலபண்டிதர் சிலநாள்கட்குமுன் பிரஸ்தாபித்ததாக ஆங்கில வர்த்தமானப்பத்திரிகை யொன்றில் வாசித்தேன். ஆங்கிலநாட்டுக் கலாசாலைகளிலேயே இவ்வாறுகாணப்படுமானால், நம்நாட்டிலுள்ள கல்லூரிகளில் தமிழிலக்கியப்பயிற்சி மெலிந்துவருவது வியப்புக்கிடமாகாது. ஆயினும், தொன்றுதொட்டு இன்றுகாறும் பரிஷ்காரமுதிர்ந்த பாஷைகளுள் ஒன்றாய் நிலைத்துவரும் தமிழின் அருமைபெருமையை அறிந்தவரெவரும் நம்மொழியின் தற்கால மெலிவுகண்டு மனத்துயர மடையாதிரார். பல்லாயிரமாண்டுகட்குமுன் செழித்தோங்கிய சமரியநாகரிக (Sumerian Civilization)த்தோடு காலத்திலும் ரீதியிலும் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் திராவிடநாகரிகம் தமிழர்க்குரித்தான சிறந்த செல்வமாயிருக்க, அதன் முதிர்கனியாகிற தமிழிலக்கியம் தற்சமயம் கல்லூரிகளிலும் மாணவர்களாலும் ஆதரிக்கப்படாமற் சோர்வடைந்து தள்ளாடும் நிலையுற்றிருப்பதை நினைக்க மனம் வருந்துகின்றது. உலகவாழ்க்கையில் நாம்பெறக்கூடிய பேறுகள் பலவற்றுள்ளும், கவிதானுபவம் சிறந்ததோர் பேறென்பதும், நமக்கு உன்னதமான இன்பம் தரக்கூடியதென்ப

* இது, திருவநந்தபுரத்து மாஜி ஹைகோர்ட்டு ஜட்ஜ் ஸ்ரீமான் K. G. சேஷையரவர்கள் (B.A., B.L.,), திருவநந்தபுர இராஜகீய ஆர்ட்ஸ்காலேஜ் தமிழ்ச்சங்கத்தின் பிரதமசம்மேளனத்தில் அவைத்தலைவராயிருந்து செய்த பிரசங்கம்.

தும் என்துணிவு. தமிழ்ப்பாஷையிற் கவிதையிற் கம்பருக்குமேலான பெயரில்லையென்பதை விளக்க நம்முன்னோர் கம்பருக்குக் கவிச்சக்ரவர்த்தியென்று புகழ்நாமஞ் சூட்டியிருக்கிறார்கள். வான்மீகி, வியாசர், காளிதாஸன்போன்ற ஆரியபாஷாகவிசிரேஷ்டர்களோடும், ஹோமர், வெர்ஜில், டாண்டே, ஷேக்ஸ்பியர், மில்ட்டன், கேதே, ஷில்லர்போன்ற மேல்நாட்டுக் கவிசிரேஷ்டர்களோடும் சமப்படுத்திக்கூறக்கூடிய கவித்திறம் பெற்ற மிக்காரென்றே கம்பரைக் கருதவேண்டும். சில அபிமானிகள் மற்றெல்லாக் கவிகளையும்விடக் கம்பர் கவிப்பெருமைபெற்றவரென்றும் கூறுகின்றனர். அதனால், கம்பர்விஷயமாக இன்று சற்று நாம் பொழுது போக்குதல் தவறாகாதென்று நினைக்கிறேன். தமிழிலக்கியப்பெருக்கத்தில், கம்பருளிய இராமாயணத்திலுஞ் சிறந்த நிதியமில்லையாகையால், அப்பெருங்காவியத்தையும் அவகாசமுள்ளமட்டில் உற்றறிதல் தமிழ் மாணவர்க்கு மிகையாகாது.

தமிழ்நாட்டில் முற்காலத்துக்கவிகளின் பெயர்கள் பல இயற்பெயர்களாகவிராமல், குறிப்பு அல்லது ஒட்டுப்பெயர்களாகவிருக்கக் காண்கிறோம். சிலபெயர்கள் பிறந்த ஊரை யொட்டியனவாயும், சில தொழில் அல்லது ஜாதிப்பெயர்களை யொட்டியனவாயும், வேறு சில அவரவர் பெருமையைக் குறிப்பனவாயு மிருக்கின்றன. தொல்காப்பியர், நக்கீரர், திருவள்ளுவர், திருவாதவூரர், மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு, ஒட்டக்கூத்தர், புகழேந்தி, வில்லிபுத்தூரார், பெரியாழ்வார், நம்மாழ்வார் போன்ற பெயர்கள் ஒட்டுப்பெயர்களாகவிருத்தல் காண்க. அவ்விதமே கம்பர்பெபரும் ஒட்டுப்பெயரென்றுநினைக்கக் கிடக்கின்றது. கம்பங்கொல்லை காத்தகாரணம்பற்றி இப்பெயர்வந்ததென்று சிலர் கூறுவர். கச்சிப்பதி யீசனும் ஏகம்பரதுபெயரின் மரூஉவென்பர் வேறுசிலர். ஆனால், இப்பெயர் அவர்பிறந்த நாடுபற்றி அவர்க்கமைந்ததென்று நான் ஊகிக்கிறேன். அவர் பிறந்தநாடு கம்பநாடு. இது பிற கவிகள் கம்பரைக் கம்பநாடனென்றுவழங்குவதால் தெற்றெனவிளங்கும். "தேனேறும் இன்சொ லிராமாயணத்தைத் திருவழுந்தூ ரானேறனைய தமிழ்க்கம்பநாடன்" என்று பாண்டிமண்டலசதகத்திற் கூறியிருக்கின்றது. இவரது சிறந்த பக்தியின்காரணமாக இவர்க்குக் கம்பநாட்டாழ்வாரென்னும்பெயர் வழங்கிவருவதுங் காண்க. இவர் பிறந்தவூர் சோழநாட்டில் திருவழுந்தூர். அது குற்றாலம் ரயில்வேஸ்டேஷனுக்கு

இரண்டுமைல் தென்கிழக்கி லுள்ளது. இவர்வீ டிருந்ததாகச் சொல்லு மிடத்திற்குக் கம்பர்மேடு என்று பெயரிப்பொழுதுங் கூறப்படுகிறது. அம்மேட்டில் முன் வீடிருந்ததற்கு லட்சியங்கள் பல இன்றுங் காணப் படுகின்றன. இந்தப் புனிதமான இடத்தைக் கம்பரது ஞாபகார்த்த மாகச் சிரத்தையா யிரட்சித்துவரவேண்டியகடமையை நந் தமிழ்நாடு முழுதுமே பொறுக்கவேண்டும். இப்பூமியைத் தமிழர் யாவர்க்கும் பொதுவான பூமியாக ஆர்ச்சித்துத் தமிழ்நாடு பாதுகாக்கவேண்டும். கம்பர் அழுந்தூரிற்பிறந்தாரென்று நா மறிவோமேயன்றி, அவரது தாய் தந்தையரைப்பற்றி நமக்கொன்றுந் தெரியாது. திருவழுந்தூரில் ஒரோச் சன்வீட்டுப் புறக்கடையிற் கம்பரை யவர்தாய் பிரசவித்தாளென்றும், குழந்தைபிறந்தவுடன் தாய் உயிர்துறந்தாளென்றும் கர்ணபரம்பரையான கதை யொன்றுளது. அவர்ஜாதி யின்னதென்று புலப்படவில்லை. அவ்வூ ரிற் பிடாரிகோவிற் பூசாரியாயிருநத ஓ ரோச்சன்புதல்வன் என்பர் சிலர். "சோணிசோழநாட்டுத் திருவழுந்தூர் உவச்சன்" என்று தமிழ் நாவலர்சரிதை கூறுகின்றது. பிறப்பாற் கம்பர் என்ன ஜாதியாயிருந்த போதிலும், அவரை யிளமையில் வளர்த்தது ஒருவச்சன். அவ ரோர் காலத்திற் கோவிற்பூசாரியாக இருந்தாரென்பது, "கைம்மணிச்சீரன்றிச் சீரறியாக்கம்பநாடன்" என்று அழுக்காறடைந்த வொருபுலவர் பாடி யிருப்பதாற் காணக்கிடக்கின்றது. உவச்சன்வீட்டில் வளர்ந்துவரும் நாளில், உரியவயதிற் கல்விபயிலக் கதிராமங்கலமென்று இக்காலம் பெயர் வழங்கிவரும் வெண்ணெய்நல்லூரிற் சடையப்பபிள்ளை யென்ற சிறந்த காணியாளரிடம் கம்பர் சேர்ப்பிக்கப்பட்டார். கதிராமங்கலம் குற்றாலத் திற்கு இரண்டுமைல் வடமேற்கி லுள்ளது. சடையப்பவள்ளலின் பேருதவியாற் கம்பர் கல்விபயின்று, கல்வியிற் பெரியவன் கம்பனென்று யாவரும் வியந்துகூறுமாறு மேன்மைபடைந்தார். வடமொழியிலும் தென்மொழியிலுமுள்ள சிறந்த நூல்பலவும் நன்குய்க்கற்று, அவற்றுட் புகுந்து, சத்தைச் செவ்வனே யாராய்ந்து கிரகித்தவர் கம்பர் என்பது அவர் இராமாயணத்தால் நன்குவிளங்குகின்றது. கல்வி கேள்விகளிற் செழித்தோங்கி, எங்கும் யாவரும் புகழ்ந்து போற்றும்படி கம்பர் சிறப்புப்பெறுதற்குக்காரணன் சடையப்பவள்ளலே.

"பெற்றும் வளர்த்தும் வித்தைதனைப்
பேணிக்கொடுத்தும் பெயர்கொடுத்தும்

பற்ற வரும்பா லமுதளித்தும்
பகைத்த வறுமைப் பயந்தீர்த்தும்
கற்ற முதுநூற் றிருவழுந்தூர்க்
கம்பன் றனையுங் கருணைசெய்தோன்”

வெண்ணெய்நல்லூர்ச்சடையப்பரேயென்று சோழமண்டலசதகம் கூறும். கம்பரை யித்துணைநலம்பெறச்செய்துதவிய கீர்த்திமிகுந்த சடையப்பவள்ளலைக் கம்பர் இராமாயணத்திற் பல இடங்களில் அமைத்து வைத்துப் புகழ்ந்துபாடியிருப்பது அதிசயமாகாது.

“எண்ணத் தரும்பா ருள்ளளவும் இரவி மதிய மெழுமளவும்
கண்ணுற் கினிய சயராம கதையி னொருபான் கவிமுழுதும்
வெண்ணெய்ச் சடையன் சடையனென விறலார் கம்பன் விளங்கவைத்த
வண்ணத் துறைவே ளாண்பெருமான் வளஞ்சேர் சோழமண்டலமே.”

என்றார் சோழமண்டலசதகத்தார். சடையப்பரைமாத்திரமன்று, அவர் குலமான வேளாளர்குலத்தையும் கம்பர் புகழ்ந்துகூறுவர். “உழுங் குலத்திற் பிறந்தாரே யுலகுய்யப் பிறந்தாரே” என்பது கம்பர்கூற்று. இவ்வாறு வேளாளரை விபந்துகூறியதுபற்றிக் கம்பர் வேளாளர் குலத்திற்றோன்றியவர் என்பர் சிலர்.

கம்பரின்காலம் யாது? இதைப்பற்றி அபிப்பிராயபேதங்களிருக்கின்றன. இதை நிர்ணயிக்க இராமாயணகாவியத்துள் அகச்சான்று காணப்படவில்லை. ஆனால், இராமாயணத்தைச் சிறப்பித்துச் சொல்லும் கவிகளிலொன்றிற் காலங் குறிக்கப்பெற்றிருக்கிறது. அச்செய்யுள் வருமாறு:—

எண்ணிய சகாத்தம் எண்ணூற் றேழின்மேற் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய இராம காதை பங்குனி யத்த நாளிற்
கண்ணிய அரங்கர் முன்னே கவியரங் கேற்றி னானே.

கம்பரியற்றிய இராமாயணம் ஸ்ரீரங்கநாதன்சந்நிதியில் சகம் 807-ல் அரங்கேற்றப்பெற்றதென்று இச்செய்யுளால் விளங்குகின்றது. இதற்கு நேரான ஆங்கில வருஷம் 885. இதைப் புறக்கணிக்க ஒரு காரணமும் நான் காணவில்லை. கம்பராமாயணம் ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீமந் நாதமுனிகள்

தலைமைவகித்த வித்வசபையில் அரங்கேற்றப்பெற்றதாகவும், கவியின் பெருமைநோக்கி அந்த வைணவ ஆசாரியர் கம்பருக்குக் கவிச்சக்கரவர்த்தி யென்னும் புகழ்நாமஞ் சூட்டினதாகவும் கர்ணபரம்பரை யுளது. ஆசாரியபரம்பரையில் ஸ்ரீமந் நாதமுனிக்கு ஆறுவது பரம்பரையினராக ஸ்ரீராமாநுஜர் கருதப்படுகிறார். ஸ்ரீராமாநுஜாசாரியர்காலம் கி.பி. 11-ம் நூற்றாண்டின் முற்பாதியென்பார்கள். ஆகவே நாதமுனிகள்காலம் கி. பி. 9-ம் நூற்றாண்டின்பிற்பாதியென்று சொல்லலாம். இராமாயணம் அரங்கேற்றுகாலமாகச்சொல்லப்படும் கி. பி. 885-ம் நாதமுனிகள் காலமும் ஒத்துவரும். "கொல்லிமலையுடைய கொற்றவா" என்று கம்பர் சோழனைச் சிறப்பித்துப்பாடிய ஒரு தனிப்பாசுரமுளதாகப் பெரியோர் கூறுவர். கொல்லிமலை கொங்கநாட்டைச்சேர்ந்தது. சோழன் கொங்கு நாட்டை வென்றகாலத்திற் கணித்தாக இச்செய்யுள் பாடப்பட்டிருக்க வேண்டும், கொங்குநாடுவென்ற சோழன் விஜயாலயன்மகன் ஆதித்த சோழராஜகேசரிவர்மன். அவன்காலத்தோடும் கி. பி 885 ஒத்திருக்கிறது. இராமாயணம் அரங்கேற்றுகாலம் அதிகதூர காலமாகச் சொல்லப்பட்டிருந்தால், கம்பருக்கு அபாரமகிமை ஸ்தாபிக்கக்கருதித் தவறாக வீணே பெரும்பழமைகற்பித்தாரென்று சொல்லலாம். ஆனால், சகம் 807 அவ்வளவு பழமையானகாலமன்று. இத்திகதி கேவலம் கற்பனையென்று நாட்டும் சரியான பிரமாணமிருந்தாலன்றி, இந்தக் கர்ணபரம்பரையை ஒப்பாமல்தள்ளிவிட நமக்கு நியாயமும் பாத்தியமும் இல்லை. சில வித்வான்கள் கம்பர்காலம் 11-ம் நூற்றாண்டென்று கூறுவது நான் அறிவேன். ஆனால் அதற்கு அவர்கூறும் நியாயங்கள் போலிநியாயங்களென்றே கூறவேண்டும். அவர்கூற்றை யொப்புக்கொள்ள நானறிந்தமட்டும் தக்க பிரமாணமொன்றும் அவர் எடுத்துக் காட்டவில்லை. இவ்விஷயத்தை விரிவாகஆராய்தற்கு இடமுங் காலமும் இஃதன்று; அதனை விம்மட்டோடு நிறுத்துகிறேன்.

கம்பர் மதக்கொள்கையைப்பற்றியும் அபிப்பிராயபேதங்க ளுள. இராமாயணகாவியத்திற்கு ஏற்புடைக்கடவுள் விஷ்ணுவாதலால், அந்நூலில் எண்ணற்றஇடங்களில் விஷ்ணுபரத்துவம் புலப்படப் பாடியிருப்ப தியல்பே. ஆனால் இராமாயணத்திற் சிவனையும் பெருமைப்படக் குறித்திருக்கின்றார். இராமாயண நூன்முகத்தில் நம்மாழ்வார்துதி பாடியிருக்கின்றார். ஆனால், அச்செய்யுளிலுள்ள "குருகைநாதன்"

என்ற தொடர்மொழி, திருக்குருகைப்பிரானான நம்மாழ்வாரென்று பொருள்படுவதோடு, நீண்ட துதிக்க (குரு-நீண்ட; கை-துதிக்கை)யையுடைய கணேசன் என்றும் பொருள்படுமாகையால் அச்செய்யுளால், கணபதிதுதி பாடினர் என்றும் நினைக்கலாம். ஏரெழுபதில் விநாயக வணக்கம் வைத்திருப்பதும் இங்கு நினைக்கற்பாலது. கம்பர் வைணவரே என்று ரூபிக்கச் சடகோபரந்தாதியிலிருந்து பின்வருஞ் செய்யுளைச் சிலர் எடுத்துக்காட்டுவர்.

"துறவா தவர்க்குந் துறந்தவர்க் குஞ்சொல்ல வேசுரக்கும்
அறவா விவையிங்கொ ராயிரம் நிற்கவந் தோசிலர்போய்
மறவா தியர்சொன்ன வாசக மாமலட் டாவைப்பற்றிக்
கறவாக் கிடப்பாங் கென்பெற வோதங்கள் கைவலிப்பே"

இக்கவி கம்பர்பாடியதேயானால், கம்பர் வைணவசித்தாந்தத்தை முற்றும்பற்றியவரென்று கூறலாம். சைவப்பற்றுடையார் ஒருவருமே இம்மாதிரி மாணிக்கவாசகரையும் அவாருளிச்செய்த திருவாசகத்தையும் நிந்தியார். ஆனல் இராமாயணம்பாடிய கம்பர் சிவநிந்தையையும் தாம் பாடுங் கவியிற் புகுத்திப்பாடுவாரோவென்று பெரியோர் ஆலோசிக்க வேண்டும். சடகோபரந்தாதி கம்பர்செய்ததென்றுகொள்ளினும், மேல் வரைந்தசெய்யுள் கம்பர்கிருதமாயிருக்கமுடியாதென்றே நான் நினைக்கிறேன். கம்பர்மகன்பெயர் அம்பிகாபதி. சைவத்துவேஷமுடையாராய்க் கம்பர் இருந்திருப்பாரேல், மகனுக் கிப்பெயர் கொடுப்பாரோ? "யாரினும் உயர்ந்த மூலத் தொருவரா மிருவர்" என்று பரசுராமர் இருமூர்த்திகளையும் சமமாகக்கூறியதும் கவனிக்க. அன்றியும், சீதாபிராட்டியார்,

"செங்கண்மால் நான்முகன் சிவனென் றேகொலோ
எங்கள் நாயகனையும் நினைந்தது"

என்று சொல்லியதுங் கவனிக்க. சைவவைணவசமயங்களை ஏற்றத்தாழ்வில்லாதனவாக நம் கவிச்சக்ரவர்த்தி கருதினரென்பதைத் துலக்க,

"அரனதிகன் உலகளந்த அரியதிக னென்றுரைக்கும்
அறிவில்லோர்க்குப்
பரகதிசென் றடைவரிய பரிசேபோல்"

என்று கிட்கிந்தாகாண்டத்தில்வருவதையிலக்காகச்சிலர்கூறுவர். அரன்றான் அதிகனென்றோ அரிதா னதிகனென்றோ கொள்ளும் துவேஷிகள் பரகதியடைவது இயலாது என்பது இதன் வெளிப்படைப்பொருள்.

இதற்கு வைணவபரமாகப் பொருளுரைப்பாரு முளர். சிவன் பிரமனிடமிருந்துதோன்றினன்; பிரமன் நாராயணனிடமிருந்துதோன்றினன் என்பது வைணவக்கோட்பாடு. அதற் கிணங்கச் சிலர் இதன் பொருள் பின்வருமாறு கூறுவர். சிவபிரானும் அவர்க்கு மேம்பட்ட பிரமனும் ஆகிய இருவர்களது உலகங்களாகிய கைலாயத்தையும் சத்திய லோகத்தையும் தமது விராட்ஸொரூபத்தினால் அளந்த விஷ்ணு மேம்பட்டவரென்றுசொல்லு மறிவு யாருக்கில்லையோ அவர்க்குப் பரகதி யடையுந்தன்மை அருமைபாம்.

சிவபரமாகவும் இச் செய்யுளடிகட்குப் பொருளுரைக்கலாம். அதாவது: சிவனே மேம்பட்டவர். அவ்வாறாக, உலகளந்த அரி மேம் பட்டவரென்று சொல்வோர் அறிவில்லாதவர். அவ் வறிவிலிகட்கு மோக்ஷமடையுந்தன்மை அருமைபாம்.

இருமூர்த்திகளும் சமமானவரென்று தாபித்தும் ஒருரையெழுத லாம். இருவரும் ஒருபரம்பொருளின் அம்சராதலால் சமமானவர் தாம் என்ற அறிவில்லாமல், 'அரனதிகன், உலகளந்த அரியதிகன்என்று பேதப்பட வாதுரைக்கும் அறிவிலிகள்' மோக்ஷஞ்சேருதல் அருமை.

இவ்வாறு பலவிதமான அர்த்தமேற்படக்கூடிய அடிகளிலிருந்து கம்பர் சமயக்கோட்பாடு இன்னதென்றுகூறமுடியாது. கம்பர்வழிபடுகடவு ளாகக்கொண்டது சமயாதீத முழுமுதலாம் பரமனையே என்றுகூறுவோர்,

"உலகம்யாவையுந்தாமுளவாக்கலும், நிலைபெறுத்தலும்நீக்கலும்நீங்கலா,
அலகிலாவிளையாட்டுடையாரவர், தலைவரன்னவர்க்கேசரணாங்களே"

என்னும் இராமாயணச்சிறப்புப்பாயிரச்செய்யுளைச் சான்றாகக் காட்டுவர். ஆக்கல் அளித்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களையும் தந் திரு விளையாட்டாகக்கொண்ட முழுமுதற்கடவுளே நாம்பணியுந்தெய்வம் என்று கம்பர் இங்குக் கூறினர். சைவம் வைணவமென்ற பேதம் பாராட்டாமல் நடுநிலையுடையராய்ப் பாரபட்சமில்லாத பெரியோர்களி லொருவர் கம்பர் என்பதே யென் துணிவு. ஆயினும், "உலகம்யாவையும்" என்னும் பாயிரத்தை இராமாயணத்தில் ஆங்காங்குக் காணும் வேறுசில செய்யுட்களுடன் ஒப்புநோக்குங்கால், கம்பருக்கு வைணவப்பற்றே அந் தரங்கமானபற்றென்று தோன்றுகின்றது. சுந்தரகாண்டத்தில்,

"மூலமும்நடுவுமீறுமில்லதோர்மும்மைத்தாய
காலமுங்கணக்குநீத்தகாரணன்கைவிலேந்திச்
சூலமுந்திகிரிசங்குங்கரகமுந்துறந்துதொல்லை
யாலமுமலரும்வெள்ளிப்பொருப்பும்விட்டயோத்திவந்தான் "

என்று ஸ்ரீராமபிரானைச் சிறப்பித்துப்பாடியிருக்கிறார். பாலகாண்டம் திருஅவதாரப்படலத்தில் "முப்பரம்பொருளுக்குமுதல்வன்'' என்றும், கடிமணப்படலத்தில் "முப்பரம் பொருளிற்றுண் முதலை மூலத்தை" என்றும், ஆரண்யகாண்டத்திற் சடாயுவதைப்படலத்தில்,

"முத்தேவரின்மூலமுதற்பொருளாம்
அத்தேவரிம்மானிடராதலினால்"

என்றும், இராமபிரானை வருணித்திருப்பது கவனிக்கத்தக்கது.

இராமாயணத்தின் மேன்மையை விரிவாயுரைக்க இப்பொழுது சமயம் போதாதாகையால், கல்விபயிலும் மாணவர்கட்குக் கல்வியின்மகிமையையும் அதன்பலனையும் நோக்கத்தையும் நன்குவிளக்குமோர்செய்யுளை மாத்திரம் இங்குக் கூறுகிறேன். அது பாலகாண்டம் நகரப்படலத்திலுள்ளது. அதுவருமாறு:—

"ஏசம்முதற்கல்விமுளைத்தெழுந்தெண்ணில்கேள்வி
ஆகும்முதற்றிண்பணைபோக்கியருந்தவத்தின்
சாகந்தழைத்தன்பரும்பித்தருமம்மலர்ந்து
போகங்கனியொன்றுபழுத்ததுபோலுமன்றே."

கல்வியென்னுமொருவித்து முளைத்தெழுந்து, எண்ணற்றகேள்விகளாகிற கிளைகளை யெங்கும் பரவச்செய்து, புண்ணியகாரியங்களாகிற இலைகளைத் தழைத்து, அன்பாகிற அரும்புகளரும்பிப் பலவகைத் தருமங்களாகிற மலர்கள்மலர்ந்து, நித்தியானந்தசுகாநுபவமாகிற கனியொன்றைப்பழுத்த விருக்ஷத்தைப்போலும்; என்பது இச்செய்யுளின்பொருள். இப்பாட்டின் வனப்பையும் மேன்மையையும் அதுபுகட்டும் அறிவையும்நன்குணர்ந்து கற்றவர்வாழ்வின்பலன் பிறஜீவர்மாட்டு அன்புபாராட்டி, அறச்செயல்களைச்செய்து அவற்றின்வாயிலாக நித்தியாநந்தம் நாடுதல் என்றறிந்து, நீங்கள் யாவரும் மேம்பாடடைய ஈசன்திருவருள் சுரக்குமாக!

உ

# பிரகிருதிசாஸ்த்ரம்.

## (Physical Science).

(மதுரை அமெரிக்கன்கல்லூரிப் பௌதிகசாஸ்த்ர ஆசிரியர்

ஸ்ரீமான் N. R. கிருஷ்ணமூர்த்தி ஐயரவர்கள், M.A., எழுதியது.)

[உகூசு-ம் பக்கத்தொடர்ச்சி.]

## பௌதிகம்

### (PHYSICS.)

பௌதிகசாஸ்த்ரம் சில பெரும்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை, முறையே பொருளியல் (Properties of Matter), உஷ்ணம் (Heat), ஒளி (Light), ஒலி (Sound), காந்தம் (Magnetism), மின்சாரம் (Electricity) என வழங்கப்பெறும். இவற்றை ஒவ்வொன்றாக எடுத்து விவரிப்போம்.

### பொருளியல்பு (PROPERTIES OF MATTER).

ஆரம்ப பௌதிகத்தின்படி பொருளானது கடினம், நீர், வாயு என மூவகைப்படும். நீர்ப்பொருள் வாயுப்பொருள் இவ்விரண்டினையும் ஒருங்கே திரவப்பொருள் என்பார்கள். "பளுவுடன் இடத்தை நிரப்புவதே பொருள்" என்று முன்னமேயே பொருளின் இலக்கணங் கூறப்பட்டது. ஆகவே, மூவகைப்பதார்த்தங்களும் பரிமாணம் (Volume) பளு (Weight) இரண்டையும் ஒருங்கே பெற்றவையென்பது கிடைக்கும். கடினம், நீர், வாயுப்பொருள்களின் இலக்கணங்களைப் பின்வருமாறு கூறலாம். ஒரு கடினபதார்த்தத்தின் உருவமும் பரிமாணமும், அப் பதார்த்தம் பிடிக்கப்பட்டாலன்றி மாறுபாடுகளைப்பெறா; பிடித்தலாவது: அழுத்தல், நீட்டுதல் முதலியன. நீர்ப்பொருளை ஒரு பாத்திரத்திற்பெய்தால் அது விரைவில் தனது உருவத்தை மாற்றிப் பாத்திரத்தின் உருவத்தைப் பெறுகின்றது. ஆனால், அதை நன்குபிடித்தலா

லல்லது அதன் பரிமாணத்தை மாற்ற இயலாது. வாயுப்பொருளானது அதைக்கொள்ளும் பாத்திரத்தின் உருவத்தையேயன்றி அதன் பரிமாணத்தையும் எளிதில் ஏற்கின்றது. ஒரு சிறிதளவு வாயுவை ஒரு பெரிய வெற்றுப்பாத்திரத்தினுட்புகுத்தவே அது பாத்திரம் முழுதும் வியாபித்துக்கொள்ளும். ஒரேபொருளானது மூன்று ஸ்திதிகளையும் ஏற்கலாம். உதாரணமாக, கடினப்பொருளாகிய ஐஸ்(Ice) எனப்படும் பனிக்கட்டியை உஷ்ணப்படுத்த அது தண்ணீராக மாறுகிறது; தண்ணீரைக்காய்ச்சவே வாயுஉருவமான நீராவியாக மாறுகிறது; நீராவியைக் குளிரவைக்க, மறுபடியும் தண்ணீராக மாறுகின்றது; தண்ணீரைத் தகுந்தவாறு குளிரவைக்கப் பனிக்கட்டியாக மாறுகின்றது. ஆகவே, பொருள் ஒன்றாகிய தண்ணீர், மூன்று ஸ்திதிகளையும் ஏற்கிறது.

இவ்விதமாக வகுக்கப்பெற்ற ஸ்திதிகளுக்குள்ள இயல்புகளையும், அவற்றிற்கேற்ற ஆராய்ச்சிகளையும் தொகுத்தலாற் கிடைக்கும் பௌதிக சாஸ்திரப்பகுதியை ஆங்கிலத்தில் ப்ராபர்ட்டீஸ் ஆப் மாட்டர் (Properties of Matter) என வழங்குவார்கள். இதனைப் "பொருளியல்பு" எனல் தகும்.

"பொருளியல்பு" ஆகிய பகுதி பல உட்பகுதிகளைக் கொள்ளும்; அவையாவன:—அளவியல், இயந்திரவியல், திரவஇயல், ஆகர்ஷணவியல், ஸ்திதிமீட்சியியல் என்பனவே. இவற்றை முறையே ஜெனரல் மெஷர்மெண்டு (General Measurements), மெக்கானிக்ஸ் (Mechanics), ஹைட்ரோஸ்டாடிக்ஸ் அண்டு ஹைட்ரோடினமிக்ஸ் (Hydrostatics and Hydrodynamics), கிராவிடேஷன் (Gravitation), இலாஸ்டிஸிடி (Elasticity) என வழங்குவார்கள். இவற்றுள் ஒவ்வொன்றையும் தெளிவாக விவரிக்கப்புகின் வியாசம் நீண்டுவிடும். ஆதலால், முதலிரண்டுபிரிவுநீங்கலாக எஞ்சிநிற்பவற்றைச் சற்றுச் சுருக்கமாகவேகூறி முடிப்போம். அளவியல், இயந்திரவியல் இவற்றின் இலக்கணம் நன்கு விளங்காவிடின் வியாசத்திற்கூறப்படும் விஷயங்கள் புலப்படாவாதல்ால், இவ்விரண்டையும் சற்று ஊன்றி ஆராய்தல்வேண்டும். அவ்வாராய்ச்சியைப் பின்னர் எடுத்துக்கொள்வோம்.

நீர் வாயுப்பொருள்கள் நிலைத்துநிற்கும்பொழுதும் சஞ்சரித்துக் கொண்டிருக்கும்பொழுதும் அவற்றிற்குரிய குணாதிசயங்கள் திரவ இயு

வின்கண் கூறப்படும். கையினால் தாங்கப்பெறாது விடப்பட்ட வஸ்துக்கள் பூமியைநோக்கி விழுகின்றன. ஆதலால், பூமிக்கும் வஸ்துக்களுக்கும் பரஸ்பரமான இழுப்பு ஒன்று உண்டு என்பது கிடைக்கின்றது. இத்தகைய ஆகர்ஷணம் அல்லது இழுப்பு பூமியின்கண் உள்ள வஸ்துக்களுக்குள்ளேயே யன்றி ஆகாயமார்க்கத்தில் சஞ்சரிக்கும் லோகங்கள், கிரகங்கள், நக்ஷத்திரங்கள் இவற்றினுள்ளும் ஏற்படுகின்றது. சூரியனானது சூரியமண்டலத்திலுள்ள பூமியையும், கிரகங்களையும், ஒவ்வொன்றுக்கு மேற்றதான அளவுகொண்ட இழுப்பினால் ஆகர்ஷித்துக்கொண் டிருப்பதனால்தான், பூமியும் மற்றைக் கிரகங்களும் தத்தமக்குரிய மார்க்கங்கள் பிறழாமல் தத்தமக்குரிய வேகங்களோடு சூரியனைச் சுற்றிவருகின்றன. இவ்விஷயங்கள் ஆகர்ஷணவியலின் கண் அமையும். இலாஸ்டிஸிடி எனப்படும் ஸ்திதிமீட்சியை ரப்பர் இயல்பு எனவுங் கூறலாம். ரப்பர் இயல்பாவது இந்தியரப்பரின்குணம். வஸ்துக்களை ஓரளவு பீடனத்துக்கு (Pressure or Force, உட்படுத்தவே, உருவம் பரிமாணம் இவைகளில் மாறுபாடுகள் ஏற்படும். பீடனத்தைநீக்கவே, அவ்வஸ்துக்கள் தாங்கள் ஆரம்பத்திற்பெற்றிருந்த உருவ பரிமாணங்களை மீண்டும் அடைகின்றன. பீடனத்திற்கும் உருவ பரிமாண மாறுபாட்டிற்குமுள்ள சம்பந்தம் பதார்த்தத்திற்கேற்றவாறு வித்தியாசப்படும். பீடனத்திற்கும் உருவ பரிமாணங்களின் மாறுபாடுகளுக்குமுள்ள சம்பந்தத்தை ஆராய்வதே ஸ்திதிமீட்சிஇயலின் நோக்கமாகும்.

அளவியல் (General Measurements):—இனி, அளவியல் இயந்திரவியல்களின் விஷயத்தைக் கவனிப்போம். இயற்கைப்பொருளாராய்ச்சிக்கு அடிப்படையாக நிற்பது பிழையற அளத்தலே. இவ்விதம் அளத்தலால்வரும் எண்களை யாவரும் எளிதில் அறியவேண்டுமாயின், உலகில் ஒருங்கு வழங்கிவருவனவாயும், எளிதிற் கையாடக் கூடியனவாயுமுள்ள பொது அளவைகள் வேண்டும். இந்த அளவைகளை, ஆங்கிலத்தில் யூனிட்டுகள் (Units) என வழங்குவார்கள். ஒரே இராசி (Quantity) யைப் பலர் அளந்துபார்த்துத் தத்தமக்குவரும் எண்களை எளிதில் ஒத்துப்பார்க்கவேண்டுமாயின், அவர்கள் தமக்குள் ஒரு பொது அளவை அல்லது யூனிட்டை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அளக்கப்படும் இராசிக்கேற்ப, உதாரணமாக நீளமோ,

கனமோ (Volume), நிறையோ (Mass), அல்லது காலமோ, அது யாதாயிருந்தாலும் சரி, அதற்கு ஒரு யூனிட்டு அவசியம். பிரக்ருதி சாஸ்த்ர ஆராய்ச்சித்துறையில் அளக்கப்படுமிராசிகள் யாவும் நீளம், நிறை, காலம் ஆகிய இம்மூன்றினுள் அடங்கும். உதாரணமாக ஒரு சதுரத்தின் பரப்பைக் கண்டுபிடிக்கவேண்டின், அதன் அகலத்தை நீளத்தாற்பெருக்கக்கிடைக்கும். ஆகவே, பரப்புஇராசியானது இரண்டுநீள இராசிகளைப்பெருக்கலான் வருவதாகும். இதுபோலவே, வேகம் என்னும் இராசியை நீளம், காலம் ஆகிய இரண்டு ராசிகளிலிருந்து வருவிக்கலாம். ஒரு குதிரையின்வேகம் மணிக்குப் பத்துமைல்; எனவே, அதுசென்ற நீள இராசியாகிய இருபதுமைல்களை அதற்கு வேண்டிய கால இராசியாகிய இரண்டு மணியால் வகுக்க, வேக இராசியாகிய மணிக்குப் பத்துமைல் கிடைக்கின்றது. இவ்வண்ணம், மூலாதாரமாயிருக்கப்பட்ட நீளம், நிறை, காலம் ஆகிய மூன்றுஇராசிகளுக்கும் "அடிப்படையிராசிகள்" (Fundamental Quantities) எனப் பெயர். இவைகளை அளப்பதற்கு யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவைகளே "அடிப்படை யூனிட்டுகள் அல்லது அடிப்படை அளவைகள்" (Fundamental Units) எனப்படும். நீளம், நிறை, காலம் இம்மூன்றிற்கும் முறையே செண்டிமீட்டர், கிராம், செக்கண்டு (Centimetre, Gramme, Second) ஆகிய இவைகளே உலகத்துச் சாஸ்த்ரஆராய்ச்சிக்காரர்களால் அடிப்படை யூனிட்டுகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவ்வடிப்படை யூனிட்டுகளீருக வருவிக்கப்பட்ட இதர யூனிட்டுகளும் உண்டு. இவற்றிற்கு "வருவித்த யூனிட்டுகள்" (Derived Units) எனப் பெயர். உதாரணமாக, செக்கண்டுக்கு ஒரு செண்டிமீட்டர் வேகமே, நீளம் காலம் இவிற்றிலிருந்து வருவிக்கப்பட்ட இராசியாகிய வேகத்தின் வருவித்த யூனிட்டாகும். செண்டிமீட்டர், கிராம், செக்கண்டு என்றால் என்ன என்பதைச் சற்றுக் கவனிப்போம்.

பிரான்ஸ்தேசத்தில் செவர்ஸ் (Sevres) என்னும் பட்டணத்திலுள்ள தேசியமண்டபத்தில் "மீட்டர்" என்னும் ஓர் நீட்டலளவையைப் பாதுகாத்துவருகிறார்கள். இந்தமீட்டரளவையானது, பிளாட்டினம் (Platinum)மெனப்படும் ஓர் உயர்ந்த உலோகத்தாற்செய்யப்பட்ட கழியில் இரு நுண்ணியகோடுகளால்வரையறுக்கப்பட்டு, வெகுஜாக்ரதையாக

வும் ஒரேஉஷ்ணநிலையிலும் பாதுகாக்கப்பெற்றுவருகிறது. இந்தமீட்டர் நூறு சமபாகங்களாகக் கோடுகளால் வகுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பாகமும் ஒருசெண்டிமீட்டர் ஆகும். இதே மண்டபத்திற் பனிக்கட்டி தண்ணீராக உருகுங்காலுள்ள உஷ்ணநிலையில், அளக்கப்பெற்ற ஆயிரம் கனசெண்டிமீட்டர் (Cubic Centimeter) பரிமாணமுள்ள சுத்தத்தண்ணீருக்குச் சமமான நிறையுள்ளதோர் பிளாட்டினக்கட்டியும் வைக்கப்பட்டுள்ளது. இந்தக்கட்டியின் நிறை (Mass) யில் ஆயிரத்திலொருபகுதியே நிறையளவையாகிய க்ராம் (Gramme) எனப்படும். எனவே, பனிக்கட்டி தண்ணீராக உருகும்போதுள்ள உஷ்ணநிலையில் ஒரு கன செண்டி மீட்டரளவுள்ள சுத்தத்தண்ணீரின் நிறையே ஒரு கிராம் என்பது கிடைக்கின்றது. செக்கண்டு (Second) ஆகிய காலயூனிட்டு, வான சாஸ்த்ர ஆராய்ச்சியாற் பெறப்பட்டது. ஒருவருஷகாலம் சூரியதினத்தின் சராசரிமானத்தைக் கண்டுபிடித்து, ஒரு சராசரிதினத்தை 86,400 சமகூறுகளாக வகுக்கச் சூரியமான செக்கண்டு கிடைக்கின்றது. இவ்வித ஆராய்ச்சியால் செக்கண்டுகளடிக்கும் நுண்ணிய கடிகாரமும் அம் மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விதம் பாதுகாக்கப்பட்டுள்ள அளவைகளின் நேர்பிரதிகளே உலகமுழுதும் சாஸ்திர ஆராய்ச்சியில் வழங்கப்பட்டுவருகின்றன. நீட்டலளவை, நிறுத்தலளவை, காலவளவை இவற்றிற்குரிய அட்டவணை கீழேகண்டவாறு:—

### நீட்டலளவை.

| | |
|---|---|
| 10 மில்லி மீட்டர் (மி. மீ.) | = 1 செண்டி மீட்டர் (செ. மீ.) |
| 10 செ. மீ. | = 1 டெசி மீட்டர் (டெ. மீ.) |
| 100 செ. மீ. | = 1 மீட்டர் (மீ.) |
| 10 மீ. | = 1 டெக்கா மீட்டர் (டெக். மீ.) |
| 100 மீ. | = 1 ஹெக்டோ மீட்டர் (ஹெ. மீ.) |
| 1000 மீ. | = 1 கிலோ மீட்டர் (கி. மீ.) |

ஒரு கிலோமீட்டர் சுமார் ஐந்துபர்லாங்குக்குச் சமமானது.

### நிறுத்தலளவை.

| | |
|---|---|
| 10 மில்லி கிராம் (மி. கி.) | = 1 செண்டி கிராம் (செ. கி.) |
| 10 செ. கி. | = 1 டெசி கிராம் (டெ. கி.) |
| 100 செ. கி. அல்லது 1000 மி. கி. | = 1 கிராம் (கி.) |
| 1000 கி. | = 1 கிலோ கிராம் (கி. கி.) |

ஒரு கிலோகிராம் சுமார் மூன்று சேர் நிறையுள்ளது.

### காலவளவை.

| | |
|---|---|
| 60 செக்கண்டு (செக்.) | = 1 மினிட்டு (மின்.) |
| 60 மின். | = 1 மணி |
| 24 மணி. | = 1 சூரியமானதினம். |

நீளம், நிறை, காலம் இவற்றை அளப்பதற்கு நுண்ணிய கருவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் அமைப்புவிசேஷங்களை ஆராய்வதும், இவற்றை உபயோகிக்கும் முறைகளை விவரிப்பதும் அளவியலின்கண் அமையும்.

இயந்திரவியல் (MECHANICS):—இனி, இயந்திரவியல் யாது என்பதைக் கூறுவோம். இயந்திரவியலானது, இயக்கம் (Dynamics) சமாதானம் (Statics என இரண்டு பகுதிகளையுடையது. வஸ்துக்கள் இடத்துக்கிடம் பெயர்ந்து சஞ்சாரநிலையிலிருக்கும்வகையை ஆராய்வது இயக்கப்பகுதியின் நோக்கமாகும். வஸ்துக்கள் ஒரே இடத்தில் நிலைபெற்றிருக்கும்வகையை ஆராய்வது சமாதானப்பகுதியின் விஷயமாகும். இவ்விரண்டின் ஆராய்ச்சிமுறையால் இயந்திரங்கள் அல்லது மெஷின்கள் (Machines) இயக்கப்படுவனவாதலால், முற்கூறிய இரு பகுதிகளையும் ஒருங்கே சேர்த்து இயந்திரவியல் (Mechanics) என வழங்குவதாயிற்று. ஆங்கிலத்தில் போர்ஸு (Force), இனர்ஜி (Energy) என்று வழங்கப்படும் இழுப்பு, சக்தி இவற்றின் இலக்கணம் இயந்திரவியலிலிருந்து கிடைக்கின்றது.

இழுப்பு (FORCE), வேலை (WORK), சக்தி (ENERGY):—இழுப்பு இன்னதென்பது யாவருக்கும் தெரியும். ஒருவன் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைப்பதாக வைத்துக்கொள்வோம். ஒரு கயிற்றில் ஒரு பாண்டத்தைக் கட்டி, அதைக் கிணற்றில் இட்டு, நீரைமுகந்து நீரின்மட்டத்திற்குச் சற்று மேலே பாண்டத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும் பொழுது அவன்செயலைக் கவனிப்போம். பூமியினது ஆகர்ஷணத்தினால் பாண்டம் பளுப்பெற்றுக் கீழேநோக்கிச்செல்லுந் தன்மையுடையதாயிருக்கிறது. கயிற்றைச் சற்றுக் கையிலிருந்து விடுத்தானேயாயின் பாத்திரம் கிணற்றின் அடித்தலம்போய்ச்சேர்ந்துவிடும். அது கீழே செல்லாதிருக்கவேண்டின், பாத்திரத்தைக் கயிற்றினால் அதன்பளுவுக்குச் சமமான இழுப்புடன் எதிர்க்கவேண்டும். அவன் இவ்வண்ணம் செய்யும்பொழுது, பாண்டத்தின் பொருளானது இரண்டு இழுப்புக்களின் வயமாகிச்சமாதான நிலையிலிருக்கிறது. அவ்விழுப்புக்களாவன, பாத்திரப் பொருளைக் கீழே விசைக்கும் பூமியிழுப்பாகிய பளுவும், அப்பளுவுக்குச் சமமாக மனிதனாலியற்றப்பெற்ற எதிரிடை யிழுப்புமேயாகும். மேனோக்கும் இழுப்பு, பளுவைக்காட்டிலும் ஒருசிறிது அதிகப்பட்டாலும் தண்ணீர்ப்பாண்டம் மேல்நோக்கிச்செல்லும். இவ்வண்ணம் பாத்திரத்தையும் ஜலத்தையும் ஜலமட்டத்திலிருந்து தரைமட்டத்திற்கு இழுக்கும் பொழுது மனிதன் வேலைசெய்கிறான். இவன் இயற்றிய வேலையின் அளவு தண்ணீர்ப்பாண்டத்தின் பளுவும், தரைமட்டத்திலிருந்து நீர்மட்டத்தின் ஆழமும் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாகும். இந்த விஷயத்தை இயந்திரவியலிற் பின்வருமாறு நிரூபித்துள்ளார்கள்; ஓரிழுப்பை ஓரளவுதூரம் எதிர்த்துச்செல்ல, வேலை இயற்றப்படுகின்றது; இழுப்பின் அளவு எண்ணிக்கையை அவ்விழுப்பை எதிர்த்துச்சென்ற தூரத்தின் அளவு எண்ணாற் பெருக்கிவரும் எண்ணே இயற்றப்பெற்ற வேலையின் அளவைக்கொடுக்கும்: அதாவது,

வேலையின் அளவு = இழுப்பின் அளவு × அதனை எதிர்த்துச்சென்ற தூரத்தின் அளவு, என்பதே.

நாம் எடுத்துக்கொண்ட உதாரணத்தில்,

மனிதன் செய்த வேலை =

தண்ணீர்ப்பாண்டத்தின் பளு × கிணற்றின் நீர்மட்டத்திற்கும் மேலே தரைமட்டத்திற்கும் இடையே உள்ள ஆழம்,

எனக் கிடைக்கும்.

சக்தி (ENERGY):-இவ்வண்ணம் தண்ணீர்ப்பாண்டத்தை மேலே உயர்த்துவதில் மனிதன் தன்னுடம்பிலிருந்து "சக்தி" யை வெளிப்படுத்தினான். "வேலைசெய்யும் ஆற்றலே சக்தி" எனச் சக்தியின் இலக்கணம் இயந்திரவியலிற் கூறப்படுகிறது. தண்ணீர்ப்பாண்டத்தின் விஷயத்தை இன்னமும் சற்றுக் கவனிப்போம். அது தரைமட்டத்திற்கு வந்துவிட்டது. மனிதன் வெளிப்படுத்திய சக்தி வேலையாக மாறிற்று. அவன் செய்த வேலை எங்குச்சென்றது? அது எங்கே மறைந்தது? தரைமட்டத்திலிருக்கும் தண்ணீர்ப்பாண்டத்திற்றான் அது மறைந்திருக்கவேண்டும். இவ்வண்ணம் மறைந்துநிற்கும் சக்திக்கு "அடக்க சக்தி" (Potential Energy) எனப் பெயர். மனிதனியற்றிய வேலை இவ்வாறு அடக்கசக்தியாகப் பாண்டத்தில் மறைந்திருக்கிறதென்பதைப் பின்வருமாறு உணர்த்தலாம். இந்தப்பாண்டத்தைத் தன்னிடத்திலுள்ள அடக்கசக்தியைவெளிப்படுத்தி வேலைசெய்யப்பண்ணுவோம்.

நீர்நிறைந்த பாண்டம் தரைமட்டத்திற்கு நேராகத் தாங்கப்பட்டு நிற்கிறது. அதைத்தாங்கும் கயிற்றை ஒரு சகடை (Pulley) யின்மேற் செலுத்திக் கயிற்றின் நுனியில் சற்றுச் சிறிய மற்றொருபாண்டத்தைக் கட்டி, அதனைக் கிணற்றிற் புகுத்தி நீரைமுகந்தபின், முதற்பாண்டம் சகடையின் சமீபத்திற் சற்றுக் கையினால் தாங்கப்பெற்று நிற்கவும், இரண்டாவதுபாண்டம் ஜலமட்டத்திற்குச் சற்று மேலே நிற்கவும், முதற்பாண்டத்திற்கு அடியேயுள்ள ஆதாவு மெதுவாக நீக்கப்படட்டும். முதற்பாண்டம் மெதுவாகக் கீழே இறங்கிச்சென்று சிறிதுசிறிதாகத் தன் அடக்கசக்தியை வெளிப்படுத்தும். இவ்வண்ணம் வெளிப்படுத்தப்பட்ட அடக்கசக்தி இரண்டாவதுபாண்டத்தை உயர்த்தும் வேலையிற் செலவாகின்றது. முதற்பாண்டம் தண்ணீரை அடையவும் இரண்டாவதுபாண்டம் தரைமட்டத்துக்கு வந்துவிடுகின்றது; முதற்பாண்

டம் தனது அடக்கசக்தியைக்கொண்டு இரண்டாவதுபாண்டத்தை உயர்த்துவதாகிய வேலையைச் செய்தது. செய்ததும், அந்தவேலை உயர்த்தப்பட்ட இரண்டாவது பாண்டத்தில் மறுபடியும் அடக்கசக்தியாக மறைந்துவிட்டது.

வேகசக்தி (KINETIC ENERGY.):—இயந்திரவியலில், அடக்கசக்தி (Potential Energy) தவிர வேகசக்தி (Kinetic Energy) என்னும் வேறொருவிதமான சக்தியும் கூறப்பட்டுள்ளது. வேகசக்தி யாது? என்பதை ஒரு உதாரணத்தைக்கொண்டு கவனிப்போம். ஒரு தண்ணீர்ப்பாண்டம் ஒரு கிணற்றின் ஜலமட்டத்திலிருந்து தரை மட்டத்திற்கு உயர்த்தப்பட்டபின் அடக்கசக்தியைக் கொண்டிருக்கிறது. கையினால் தாங்கப்பட்ட பாண்டத்தை ஆதாரமின்றிவிடுக்கவே, பாண்டம் கிணற்றினுள் விழுந்துவிடும். அது விழுந்துசெல்லும்பொழுது அதன் வேகம் வர வர அதிகரிக்கின்றது. அது ஜலமட்டத்தை அடைந்ததும் அதன் அடக்கசக்தி முழுதும் வேகசக்தியாக மாறிவிடுகின்றது. இந்த வேகசக்தியின் அளவு இயந்திரவியலில் வருவிக்கப்பட்டிருக்கின்றது. வருவிக்கும்விதம் கூறப்புகின் வியாசம் விரிந்துவிடுமாதலின் முடிவைமட்டுமே எடுத்துக்கொள்வோம்.

ஒரு வஸ்துவின் வேகசக்தி =

$\frac{1}{2}$ × வஸ்துவின் நிறை × அதன் வேகத்தின் துவிவர்க்கம்.

(ஒரு எண்ணை இருமுறை பெருக்க அவ்வெண்ணின் துவிவர்க்கம் கிடைக்கும்; உதாரணமாக 5-க்கு துவிவர்க்கம் = 5 × 5 = 25.)

2 கிராம் நிறையுள்ள ஒரு வஸ்து, ஒரு செக்கண்டுக்கு 1 செண்டிமீட்டர் வேகத்துடன் சென்றால்,

அதன் வேகசக்தி = $\frac{1}{2}$ × 2 × 1 சக்தியூனிட்டுகள்

= 1 சக்தியூனிட்டு.

இந்த சக்தி யூனிட்டுக்கு எர்கு (Erg) எனப் பெயர். இன்னும் ஒரு உதாரணம் எடுத்துக்கொள்வோம். 1000-கிராம் நிறையுள்ளதோர் பீரங்கிக்குண்டு ஒரு செக்கண்டுக்கு 2000 செண்டிமீட்டர் வேகத்துடன் சென்றால்,

அதன் வேகசக்தி = $\frac{1}{2} \times 1000 \times 2000 \times 2000$
= 200,0000000 எற்குகள் (Ergs).

வேலையும் சக்தியும் ஒரே அளவைகளான் அளக்கப்படுகின்றன. இரண்டு கிராம் நிறையுள்ள ஒரு வஸ்து ஒரு செக்கண்டுக்கு ஒரு செண்டிமீட்டர்வேகத்துடன் செல்லுமாயின் அது பெற்றுள்ள வேக சக்தியின் அளவு ஒரு யூனிட்டு என முன்னரே காட்டப்பட்டது. இந்த சக்தியூனிட்டுக்கு எற்கு (Erg) எனப் பெயர். எற்கு மிகவும்சிறிய அளவானதால் பொதுவழக்கில் ஒரு கோடி எற்குக்குச் சமமான ஜவுல் (Joule) என்பதையே யூனிட்டாக வழங்குகிறார்கள்.

1 ஜவுல் = 1,0000000 எற்குகள். ஆகவே முந்திய உதாரணத்தில்

பீரங்கிக்குண்டின் வேகசக்தி = 200,0000000 ÷ 1,0000000 ஜவுல்கள்.
= 200 ஜவுல்கள் (Joules)

இவ்விதமாக இழுப்புக்கும் சக்திக்குமுள்ள இபைபையும், இழுப்பு, சக்தி, வேலை இவற்றின் இலக்கணங்களையும் உணர்த்துவதேயன்றி, இயந்திரங்களின் அமைப்பில் உபயோகப்படும் மூலாதாரமான இயந்திரங்க (Machines)ளாகிய எஃகுகோல் (Lever), சகடை (Pulley), சாய்வுப்பலகை (Inclined Plane), திருகாணி (Screw) இவற்றின் விஷயங்களை ஆராய்வதும் இயந்திரவியலின் நோக்கமாகும்.

இனிப் பௌதிகசாஸ்த்ரத்தின் முதற்பகுதியாகிய பொருளியலின் (Properties of Matter) ஆராய்ச்சியை நிறுத்தி, சக்தியானது இழுப்புக்களை எதிர்த்து வேலை இயற்றும்வழிகளில் அல்லது வேறுவழிகளில் வெளிப்படுவதைச் சற்று ஆராய்வோம். உஷ்ணம் (Heat), ஒளி (Light), ஒலி (Sound), காந்தம் (Magnetism), மின்சாரம் (Electricity) என்பவையும் சக்தியின் தோற்றங்களே. வேலை இயற்றும் சக்தியிலிருந்து இவற்றை உண்டுபண்ணலாம்; இவற்றைக்கொண்டு இழுப்புக்களை எதிர்த்து வேலைசெய்விக்கலாம்; எனவே இவற்றின் பொதுத்தன்மை விளங்கும். இனி உஷ்ணத்தைப்பற்றிச் சுருக்கமாகக் கூறுவோம்,

[தொடரும்]

ஸ்ரீ:

# கம்பரைக் கற்கும் முறை.

ஸ்ரீமான். பி. ஸ்ரீ ஆசாரியர் எழுதுவது.

[உ௮௮-ம் பக்கத் தொடர்ச்சி.]

## முன்றிற்சோலை.

### [பாலகாண்டஅமைப்பு.]

இனி, இராமாயணத்தோடு அவயவசம்பந்தம்பெறாத பாலகாண்டத்தினைத் தமது காவிய அரண்மனைக்கு இன்றியமையாததோர் அழகிய முன்றிற்சோலையாக்கிய கவிச்சக்கரவர்த்தியின் ரஸிகத்தன்மை நுணுகி நோக்கத்தக்கது. காவியத்தின் தனிப்பெருநிகழ்ச்சியாகிய இராவணவதத்தோடு ஒருவாறு தொடர்புடைய பாலகாண்டநிகழ்ச்சிகள் இரண்டு; அவை கதாநாயகனது திருவவதாரமும் திருமணமுமாகும். இவை முறையே திருவவதாரப்படலத்திலும் கடிமணப்படலத்திலும் விரித்துரைக்கப்படுகின்றன.

திருவவதாரப்படலத்தின் சாராம்சம்வருமாறு:- அரசர்க்கரசனாகிய தசரதன் ஒருநாள் தன் குலகுருவாகிய வசிட்டமுனிவனை வணங்கி, "நெடுங்காலம் உனதருளினால் உலகத்தை ஆண்டேன்; எனக்கு வேறு குறையொன்றுமில்லை; எனதாசாட்சியில் யாதொருவருத்தமுமின்றி வாழும் மக்கள் எனக்குப்பின் (என்னைப்போல் ஆளச்சந்ததியின்மையால்) வருந்துவார்களே என்பதோர் அருந்துயரம்மாத்திரம் என் உள்ளத்தை வருத்துகின்றது" என்று விண்ணப்பஞ்செய்தான். அப்பொழுது ஒரு தேவரகஸியம் வசிட்டனுள்ளத்திற் புலனாயிற்று. முன்னொருகாலத்திற் றிருமால் இராவணாதிய கொலைத்தொழிலரக்கர்தங்கொடுமைதீர்க்கத் தான், தசரதச்சக்கரவர்த்தியின் புதல்வனாய்ப்பிறப்பதாக வானவர்க்குரைத்த வாய்மையே அது. அதனை மனத்திலெண்ணி, முனிவன் அரசனை நோக்கி, "மன்ன! நீ வருந்தல். புதல்வரையளிக்கும் வேள்வி முயலின், உன் சிந்தைநோய் தீரும்" என்றான். உரோமபதமன்னன் திருநாட்டிலுள்ள கலைக்கோட்டுமாமுனியால் வேள்விமுற்றிற் புதல்வர்

உண்டாவர் என்று வசிட்டன் சொல்லக்கேட்டு, மன்னர்மன்னன் பரிவாரங்களோடு புறப்பட்டுப்போய் உரோமபதனுதவியால் அம்முனியை அழைத்துவந்து வேள்விசெய்தான். வேள்வியில் உண்டான பிண்டம் காரணமாக, இராமன், பரதன், இலக்குவன், சத்துருக்கன் ஆகிய நால்வரும் அவதரித்தார்கள். அரசிளங்குமரர்கள், வேதசாத்திரங்கள் கற்று, வில்முதலிய ஆயுதப்பயிற்சியும் பெற்றுக் "கலையாழிக் கதிர்த்திங்க ளுதயத்திற் கலித்தோங்கும் அலையாழியென வளர்ந்தார்." சக்கரவர்த்தியும் அதிக மனமகிழ்ச்சியோடு அரசுசெய்துவந்தான்.

கடிமணப்படலத்தின் கதைச்சுருக்கம்வருமாறு:—(ஒருவரையொருவர் கண்டு காதலித்தவர்களான) இராமனும் சீதையும் இரவு எப்பொழுது விடியுமென்று தனித்தனி எண்ணினார்கள். ஜனகன் நாளைத் திருமணம் என்று முரசறைவித்தான். சூரியனுதிக்கவே நகரமாந்தர் நகரத்தையும் தங்களையும் அலங்கரித்துக்கொண்டு ஆநந்தபரவசராயினர். வாத்தியகோஷம் வேதகோஷம் முதலியவை கங்குலினொலிக்கும் பெருங்கடல்போல் ஒலித்தன. சக்கரவர்த்தி மணமண்டபம் அணுகி மணியாசனம் பொலிய வீற்றிருக்க, ஜனகனும் உறவினரும் அரசரும் முனிவரும் முறைப்படி ஆசனங்களி லிருந்தார்கள். அப்பொழுது இராமன் திருமணக்கோலம்பூண்டு, பரதன் கோல்கொண்டு தேர்செலுத்தவும், இலக்குவனும் சத்துருக்கனும் சாமரையிரட்டவும் மணமண்டபத்திற்குவந்து வசிட்டனாதிய மாதவர்களைத் தொழுது தந்தையாகிய சக்கரவர்த்தியையும் வணங்கிப் பக்கத்தில் வீற்றிருந்தான். அச்சமயத்திற் சீதையும் மண்டபத்திற் பிரவேசித்தாள். வசிட்ட முனிவன் வேதியர்சூழத் தருப்பையோடெய்திப் பங்குனியுத்தரநன்னாட்பகலில் திருமணச் சடங்குக்குரிய மங்கல அங்கியை வளர்த்தனன். பின் மணத்தவிசேறி வீரனும் சீதையும் 'ஒன்றிய போகமும் யோகமு மொத்திருந்தார்.'

*"கோமகன் முன்சன கன்குளிர் நன்னீர்
பூமக ளும்பொரு ளும்மென நீயென்
மாமகள் தன்னொடு மன்னுதி யென்னாத்
தாமரை யன்ன தடக்கையி னீந்தான்."

* கடிமணப்படலம்—அ௭.

அந்தணர் ஆசிகூற, மாதர்கள் பல்லாண்டிசைக்கச் சங்கம் முழங்கின. இராமனும் மந்திரஞ்சொல்லி அக்கினியில் ஆகுதிமுற்றும் முடித்து ஜானகியைப் பாணிக்கிரகணஞ்செய்தான். வேள்வித்தீயை வலம்வந்து வணங்கிப் பொரியிட்டு அம்மிமிதித்துக் காதலரிருவரும் அருந்ததி கண்டனர். இராமன் பின்னும் செய்வனசெய்து சீதையைக் கைக்கொண்டு, சக்கரவர்த்தியையும் முனிவரையும் வணங்கி, நன்மனைபுகுந்தான். பேரி சங்கம் ஆதியன முழங்கின. இராமனும் சீதையும் கைகேயி முதலிய மூவரையும் வணங்கினர்.

திருவவதாரம் திருமணம் என்னும் இரண்டுமே பாலகாண்டத்தின் பிரதான நிகழ்ச்சிகளாகும். திருவவதாரப்படலமும் கடிமணப்படலமும் சேர்ந்து ௨௪௧ விருத்தங்களால் அமைகின்றன. ஆனால், இவற்றைமாத்திரம் வைத்துக்கொண்டு இக்காண்டத்தினைக் கம்பர் தமது காவியப்பூங்கோயிலுக்குத் தக்கதோர் முன்றிற்சோலையாக அமைப்பது எவ்வாறு? காவியத்தின முன்றிற்சோலையாக அமையும் ஒருகாண்டம் தன்பெருமைக்கேற்பப் பலபடலங்களுடன் சற்றேறக்குறைய ௧௫00 செய்யுள்களாலாவது அமைதல்வேண்டுமன்றோ? இதற்காக அவர் கையாளும் உபாயம் வாசகர்களால் நன்கு சிந்தைசெய்யத் தக்கது.

கம்பர் இராமனது அவதாரஸ்தலமாகிய நாட்டினையும் நகரினையும் பலபாடல்களால் முதல் நான்குபடலங்களில் வருணிக்கின்றார். இவ்வண்ணமே ௧0-வது மிதிலைக்காட்சிப்படலந்தொடங்கி ௨0-வது கோலங்காண்படலம் ஈறாகவுள்ள பதினொருபடலங்களும் கடிமணப்படலத்தைத் தழுவி அணிசெய்கின்றன. இத்தகைய உபாயத்தால் (௨௨ படலங்கள் அடங்கிய) பாலகாண்டத்தின் பெரும்பகுதியும் உருவாக்கப்பெறுகின்றது. இப்படலங்களின் அமைப்புமுறை எவ்வாறு கம்பரது கவிச்சிற்பத்திறமையினை வெளியிடுகின்றது என்பதை இச்சந்தர்ப்பத்தில் ஒருவாறு நோக்கிச்செல்வோம்.

ஞானப்பூங்கோயில்.

*"புறத்துநாமொரு பொருளினிப் புகல்கின்ற தெவனோ
அறத்தின் மூர்த்திவந் தவதரித் தானென்ப தல்லால்"

*மந்திரப்படலம்—௩௭.

என்பது 'மூவரினுல்வாரம்' வசிட்டமுனிவன்வாய்மொழி. அறத்தின் மூர்த்தியின் அவதாரஸ்தலம் ஓர் அறப்பெருங்கோயிலாக அமைக்கப் பெறுகின்றது.

> *"ஆற்றல் நல்லற மல்ல திலாமையால்
> ஏற்ற மல்ல திழிதக வில்லையே"

என்று புகழப்படுவது கோசலநாடு. இவ் அறப்பெருங்கோயில் முதல் நான்குபடலங்களிற் படிப்படியாக வளர்கின்றது.

> "ஆசலம்புரியைம்பொறிவாளியும்
> காசலம்புமுலையவர்கண்ணெனும்
> பூசலம்பும்நெறியின்புறஞ்செலாக்
> கோசலம்புனையாற்றணிகூறுவாம்"

என்று காவிய முகப்பிலேயே கம்பர் தமது அறப்பெருங்கோயிலுக்கு அஸ்திவாரக்கல் (Foundation-stone,) இடுகின்றார். அறப்பெருஞ் செல்வான கோசலநாட்டினரது சமுதாயவாழ்க்கையின் ஜீவநாடியாக அமைவது நல்லொழுக்கமேயாகும். கோசலநாடென்னும் அறப்பெருங் கோயிலுக்கு வளமும் வனப்பும் தரும் சரயுநதி, இரவிகுலத்து எண் ணிறந்த வேந்தர்பரம்பரையின் இடையறாத நல்லொழுக்கமெனப் பெருகி வருகின்றது. 'உயிரெலாம் உறைவதோர் உடம்'பாக அமையும் அரசாங்கம் நெறிநின்று புறஞ்செல்லாது அமைதலின் அது குடிகளது நல்லொழுக்கத்தின் வளர்ப்புப்பண்ணையாகின்றது. கோசலநாட்டினர் ஒழுக்கத்தில் ஓங்குகின்றார்; ஒழுக்கமெனும் அழியாப் பெருநிதியோடு பிறநிதிகளும் அவர்களை வந்தடைகின்றன. 'முதற்கண் இறைவனது பரமபதராஜ்யத்தைத் தேடுங்கள்; இம்மைச்செல்வங்களெல்லாம் அருட் செல்வத்தினைத் தொடர்ந்து வந்தடைவனவாகும்' என்பது கிறிஸ்து மூர்த்தியின் மணிவாக்கு. இராமராஜ்யத்திலே இந்நிலைமை ஏற்பட் டிருந்ததெனக் கம்பர் கூறுகின்றார்.

---

*நாட்டுப்படலம்—நக.

*"கலஞ் சுரக்கு நிதியங் கணக்கிலா
நிலஞ் சுரக்கு நிறைவள நன்மணி
பிலஞ் சுரக்கும் பெறுதற் க்ரியதம்
குலஞ் சுரக்கு மொழுக்கங் குடிக்கெலாம்"

என்றபடி இராமராஜ்யவாசிகள் பொருட்செல்வத்திலும் அருட்செல்வத்திலும் ஒருங்கே தலைசிறந்து ஓங்குகின்றார். "பொருட்செல்வம் பொங்குகின்றது; ஆனால் மக்கள் அழிகின்றார்" என்ற மேல்புலக் கவிஞனது பிரலாபம் இராமராஜ்பத்துக்குப் பொருந்துவதன்று; இராவணராஜ்பத்துக்கே பொருந்துவதாகும். இராமராஜ்யத்திலே பொருளும் பொங்கிப் பெருகுகின்றது; மக்களும் அழிகின்றாரில்லை, ஒழுக்கத்தால் ஓங்குகின்றார். இத்தகைய ராமராஜ்பத்திற்கு அடிப்படை முதற்படலமாகிய ஆற்றுப்படலத்திலேயே அமைக்கப்படுகின்றது.

†"தாதுகு சோலை தோறுஞ் சண்பகக் காவு தோறும்
போதவிழ் பொய்கை தோறும் புதுமணத் தடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூக வனந்தொறும் வயல்கள் தோறும்
ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாய தன்றே"

என்றவாறு சோலைகளையும் சண்பகக்காக்களையும் பொய்கைகளையும் புதுமணத்தடங்களையும் காடுகளையும் வயல்களையும் உடம்பாகக்கொண்டு உலவிவரும் சரயுநதி, 'இறையுயிரொன்றே உலகம் யாவையும் உடம்பாகக்கொண்டு உலவுகின்ற' தென்னும் பேருண்மையினை நினைப்பூட்டுகின்றது. மணிகள் முதலியவற்றைக் கோத்து நிற்கும் பொற்சரடுபோல் உயிர்களையெல்லாம் ஒன்றுபட இணைத்து நிற்பது இறையுயிராகும். இதனாலன்றோ சகோதரதர்மம் ஓரியற்கை விதியாக அமைந்துளது! ஒழுக்கமின்மையென்பது இத்தகைய தர்மத்தை மீறி, எங்கணும் காந்து பரந்துள்ள இறையுயிருக்கே துரோகஞ்செய்ப முயல்வதாகும்.

---

*நாட்டுப்படலம்—௩அ.
†ஆற்றுப்படலம்—௨0.

*"தந்தையால் வகுக்கப் பட்ட சராசரப் பொருள்கடோறும்
வந்தவன் றீம்பா னெய்போ லுயிர்க்குயி ராகி வாழும்
பந்தம துணர்ந்து நேரே பார்க்குங்காற் பகையார் நண்பார்"

உயிர்களெல்லாம் இறைபுயிரொன்றால் ஒன்றுபட்டு இணைந்துநிற்கும் பந்தமே சகோதாதர்மமாகிய இயற்கை யுண்மையாகும். இவ்வுண்மையினை உணர்ந்து இதனோடு ஒத்துழைப்பதே நல்லொழுக்கம்— 'நெறியின்புறஞ்செலா'மை.

†"வஞ்சித் தொழுகும் மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின்—வஞ்சித்த
எங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு"

என்றபடி யாண்டுங் கண்களாயிருப்பது இறைபுயிரென்றுணர்ந்து சகோதாதர்மத்திற் கிணங்கி வாழ்வதே வாழ்வு. பிறர்க்கினியர் தமக்கினியர்; பிறரை வஞ்சிப்போர் தமக்குத்தாமே வஞ்சகராவர். இது அறநெறியின் மர்மம். 'வஞ்சனேன் எனக்கு நானே!' என்று சீதாபிராட்டியை நோக்கிக் கூறும் இராவணன்கூற்றில் இம்மர்மம் ஒருவாறு தொனிப்பது காணலாம். ஆனால் இம் முழுவுண்மையினையும் அயோத்திமாந்தர் நன்குணர்ந்து அறப்பெருவாழ்வு வாழ்ந்தனர் என்பது கம்பர் குறிப்பு.

‡"எனக்கு நல்லையு மல்லைநீ யென்மகன் பரதன்
றனக்கு நல்லையு மல்லையத் தருமமே நோக்கின்
உனக்கு நல்லையு மல்லைவந் தூழ்வினை தூண்ட
டினக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தாய்"

என்று கூனியைநோக்கிக் கைகேயி கூறுகின்றாள். "நீ இராமனை வஞ்சிக்கப்பார்க்கின்றாய்; உண்மையில் நீ உன்னையே வஞ்சித்துக்கொள்கிறாய் 'பிறரை வஞ்சிப்போர் தம்மைத் தாமே வஞ்சிப்போராவர்' என்ற பிரசித்தமான தர்மத்தை நோக்குவாயாக" என்பது கைகேயிகூற்றின்

*வில்லிபாரதம் வீட்டுமபருவம் முதற்போர்ச்சருக்கம்—௮.
† நீதிநெறிவிளக்கம் ௩௮.
‡ மந்தரைசூழ்ச்சிப்படலம்—௩௫.

சாராம்சம். கொடுமனக்கூனியின் சூழ்ச்சியால் இருண்டுபோவதற்கு முன் கைகேயியின் செம்மனம் 'சகோதரதர்மம்' என்னும் இயற்கைவிதியினைக்குறித்த உண்மையொளி பெற்றிருந்ததென்பது வெளிப்படை. அறப்பெருநெறியின் அடிப்படைவிதியாகிய சகோதரதர்மத்தினை இராமராஜ்யத்திலுள்ள பெண்மக்களும் நன்குணர்ந்தொழுகினர் என்பது கம்பர் கொள்கை. ஆகவே நம் கவிச்சக்கரவர்த்தி, *'காரிகையார்கண்ணே விலங்குவன மெய்ந்நெறியை விட்டு' என்றுரைத்துக்கூறாது, "காசலம்புமுலையவர் கண்ணெனும்—பூசலம்பு நெறியின் புறஞ்செலாக் கோசலம்" என்று தமது ஞானப்பூங்கோயிலாகிய கோசலநாட்டைச் சிறப்பித்துக்கூறுகிறார்.

பெண்மையின்பெருமையே கம்பரது கோசலநாட்டின் பெருமைக்கு அடிப்படையாகின்றது. †" தங்கணாயகரிற்றெய்வம் தவம்பிறிதிலவென்றெண்ணும், மங்கைமார்சிந்தைபோலத்தூயது " என்று திருமால் தவஞ்செய்த சோலையின் தூய்மைக்குப் பெண்மக்களின் மனத்தூய்மையினை ஒப்பிட்டுக்கூறும் கவிஞர்பெருமான்,

‡ "பெருந்தடங்கட்பிறைநுதலார்க்கெலாம்
பொருந்துசெல்வமுங்கல்வியும்பூத்தலால்
வருந்திவந்தவர்க்கீதலும்வைகலும்
விருந்துமன்றிவிளைவனயாவையே"

என்னுஞ் செய்யுளால் அயோத்திநகரவாசிகளான பெண்மக்கள் இயற்கையாகத் தமக்கமைந்துள்ள தூயசிந்தையினைக் கல்வியறிவாற்பண்படுத்திக்கொள்வாராயினர் என்று கூறுகின்றார் இயற்கையான இதயத்தூய்மையோடு கல்விப்பயிற்சியும் பெற்றிருந்த பெண்மக்களது பெருந்தடங்கண்கள் நெறியின்புறஞ்செல்லவில்லையென்று கம்பர்கூறுவதில் வியப்பொன்றுமில்லை. அறிவுச்சுதந்திரத்தோடு பொருளாதாரநிலையிலும் பெண்கள் கோசலநாட்டிலே சுதந்திரமுற்றுவாழ்ந்தனரென்பது, 'பிறைநுதலார்க்கெலாம் பொருந்துசெல்வமும் கல்வியும் பூத்தலால்' என்றசொற்றொடரால் இனிது விளங்கும். கல்வித்துறையிலும் செல்வத்துறையிலும் ஒருங்கே சுதந்திரம்பெற்றிருந்த பெண்மக்களது வாழ்விலே அறப்பெருங்கோயிலாகிய கோசலநாடு வேரூன்றி வளர்ந்தோங்குகின்றது.

---

*நளவெண்பா, சுயம்வர—௩௫.

†வேள்விப்படலம்—௧௧.

‡நாட்டுப்படலம்—௩௪.

"அன்பும் அறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது"

என்பது தேவர்குறள். ஒரு குடும்பத்தில் இருபாலாரிடத்தும் அன்பே பண்பாகத் திகழுமெனின் அறனே பயனாகத் தழைத்தோங்குமென்பது திருவள்ளுவர்கருத்து. இக்கருத்தினையே கம்பரும், 'அன்பரும்பித் தருமம் மலர்ந்து' என்ற சொற்றொடராற் குறிக்கின்றார். கோசலநாட்டிலே தருமம் ஆண் பெண் என்னும் இருபாலாது அன்பினின்றும் மலர்கிறது. எனினும், *'மாதரார் அற்பினின்றன அறங்கள்' என்று கூறி, நமது கவிஞர், பெண்மக்களின் பேரன்பிலேயே 'இராமராஜ்பம்' என்னும் அறப்பெருங்கோயில் நிலைபெற்றுநிற்கின்றதென்பதை வலியுறுத்திச் செல்கின்றார். மெய்யொழுக்கத்தினின்றும் அன்பு அரும்புகின்றது. அன்பினின்றும் தருமம் மலர்கின்றது. இஃது இருபாலார்க்கும் பொதுவான விதியாக இருப்பினும், பெண்மக்களது ஒழுக்கமும் அன்பும் அறப்பற்றும் இராமராஜ்யத்தை விசேஷமாக உருவாக்கின என்பது கம்பர்கருத்து. இத்தகைய பெண்மையின் பெருமைக்குக் காரணமாவது பெண்கல்வியேயாகும்.

†"ஏகம்முதற்கல்விமுளைத்தெழுந்தெண்ணில்கேள்வி
ஆகம்முதற்றிண்பணைபோக்கியருந்தவத்தின்
சாகந்தழைத்தன்பரும்பித்தருமம்மலர்ந்து
போகங்கனியொன்றுபழுத்ததுபோலுமன்றே"

என்ற வண்ணம் "இராமராஜ்யம்" கல்விமயமாக விளங்குகின்றது. 'கந்தனையனையவர் கலைபயில்கழக'ங்கள் ஆண்மக்களது கல்விச்சிறப்பினைக் காட்டுகின்றனவெனினும், இராமராஜ்யத்தின் அறப்பெருஞ்செல்வத்திற்கு அடிப்படையான காரணமாகக் காண்பது பெண்கல்வியேயென்பது கம்பர்மதம். நிலத்தின்றன்மை பயிர்க்குளதாகுமன்றோ? அறியாமையும் அடிமையுணர்வுங்கொண்ட தாய்மார்கள் சிறந்த நன்மக்களைப் பெறுவதில்லை; "தாயைப்போலே பிள்ளை, நூலைப்போலே சேலை". என்பது காலங்கண்ட அறிவுக்களஞ்சியமான முதுமொழியன்றோ? அயோத்தியின் தாய்மார்களே அந்நாட்டின்பெருமைக்குப் பெருங்காரணராக விளங்கினர்.

---

* நாட்டுப்படலம்—ருக. † நகரப்படலம்—எ௯.

இங்ஙனம் பெண்மையின் பெருமையினை உயிர்நிலையாகக்கொண்டு ஓங்கும் அறப்பெருங்கோயிலை நமக்கு முதன்மூன்றுபடலங்களிற் படைத்துத்தரும் கம்பர், சமுதாயவாழ்க்கையின் உயிரினைத்தொடரும் உடம்பெனத் தொடர்ந்துகாக்கும் அரசியலின்பெருமையினை நான்காவதுபடலத்தில் வெளியிடுகின்றார். அறிவுப்பெருங்கடலை 'எண்ணில் நுண்ணூல் ஆய்ந்தேகடந்த சக்கரவர்த்தி *'நுணங்கு கேள்வி ஆயப் புகுங்கால் அறிவொக்குமெவர்க்கும்' என்று சிறப்பித்துக் கூறப்படுகின்றான். கல்வியாகிய கற்பகவிருக்ஷமே இராமராஜ்யமாகுமென்று காட்டும் கம்பர் இத்தகைய சிறப்பிற்குக் காரணம் அந்நாட்டின் அரசியலேயாகுமென்பதைக் குறித்துச் செல்கின்றார்.

†"கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்வி முற்ற
வல்லாரு மில்லை யவைவல்லரல் லாரு மில்லை
எல்லாரு மெல்லாப் பெருஞ்செல்வமு மெய்த லாலே
இல்லாரு மில்லை யுடையார்களு மில்லை மாதோ"

என்னும் இச்செய்யுளிற் கோசலநாடாகிய அறப்பெருங்கோயிலின் பரிபூரணமான சித்திரம் அமைந்துகிடக்கின்றது. இத்தகைய ஒப்புயர்வற்ற சிறப்போடு அந்நாடு திகழ்வதற்குக் காரணமான அரசியல், நான்காவதுபடலத்திற் சுருக்கமாகவும் விளக்கமாகவும் வருணிக்கப்படுகின்றது. அன்பினில் அன்னையையும், நலம்பயப்பிற் றவத்தினையும், முன்னின்று செல்கதியுய்க்குந் தன்மையிற் புதல்வனையும் ஒத்துநின்று, 'நோயொக்குமென்னின் மருந்தொக்கும்' என்னுஞ் சிறப்புவாய்ந்த சக்கரவர்த்தி 'வெள்ளமும் பறவையும் விலங்கும் வேசையருள்ளமும் ஒருவழியோடநின்றவன்' ஆட்சிசெய்யும் முறையே கோசலநாட்டின்பெருமைக்கும் அந்நாட்டுப்பெண்மக்களின் பெருமைக்கும் காரணமாகின்றது. இவ்வாறு முதல் நான்குபடலங்களில் வருணிக்கப்பெறும் ஞானப்பூங்கோயில் அடுத்தபடலத்திற் கூறப்பட்டுள்ள திருவவதாரம் என்னும் முதற்பெருநிகழ்ச்சிக்கு ஏற்ற களனாக அமைகின்றது.

[தொடரும்.]

---

* அரசியற்படலம்—௪. † நகரப்படலம்—௭௪.

# ஒரு நிரூபம்.

.... .... .... .... .... .... .... .... .... .... ....

நாளது பிரபவ ஆடிப்பகுதியில், ஸ்ரீ L. ஸ்ரீநிவாஸையரவர்கள் எழுதிய 'அநபாய குலோத்துங்கன்' என்னும் விஷயத்தைப் படித்தேன்.

அவர், அநபாயன் என்பவன் முதற் குலோத்துங்கனே என்பதைத் தெளிவாக்கியபின், எழுதியுள்ளது:—"வடமொழியில் காவ்யாதர்சம் என்ற அலங்காரசாஸ்திரத்தையும், அதைத்தழுவிய மொழிபெயர்ப்பாகவே தமிழில் தண்டியலங்காரம் என்ற அணியிலக்கணத்தையும் இயற்றியருளிய ஆசார்யதண்டி என்ற மஹாகவி மேற்கூறிய அவ்விரண்டு அலங்கார நூல்களிலும் அநபாயன் என்ற வேந்தனது கோலும் சீரும் ஓங்குமாறு வாழ்த்தும் முறையிற் சில செய்யுட்களை உதாரணமாகக்காட்டியுள்ளார்" என்பதே. இவ்விஷயம் எனக்கு விளங்கவில்லை.

நான், 'ஹிந்து' தினபத்திரிகையில் (30–3–27) 'தமிழ்த் தண்டி' என்ற தலைப்பின்கீழ் எழுதிய சிற்றுரையில் 'அணியியல்' எனப்படும் தண்டியலங்காரத்தைத் தமிழ்செய்தவர் யாரென்பதைப் பலர் பலபட உரைக்கின்றனர். ஆசார்யதண்டியின்பெயரைக்கொண்ட தமிழன் ஒருவனால் ஆக்கப்பட்டதென்பது கர்ணபரம்பரையாகவந்தசெய்தி. ஆசார்யதண்டி காஞ்சீபுரத்தில் இருந்தவர் என்பதற்கும் கர்ணபரம்பரையான கதையும் வேறுசில ஆதாரங்களும் உள்ளன. ஆகவே அவரே தமிழிலும் எழுதியிருத்தல் கூடும். தண்டியலங்கார ஏடுகளைப் பரிசோதித்து உதாரணவெண்பாக்கள் ஆசிரியரின் காவியாதரிச உதாரணங்களுக்கு எவ்வளவுதூரம் மொழிபெயர்ப்பாக உள்ளன என்பதை ஒப்பிட்டால் இதன் உண்மை விளங்கலாம் என்று காட்டினேன். அவ்வகைப் பரிசோதனையினின்று ஆதியிலுள்ள மொழிபெயர்ப்பின்காலம் விளங்குமென்றும், அதினின்றும் ஆசார்யதண்டியின்காலமும் விளங்கலாமென்றும் குறிப்பிட்டேன். சில மொழிபெயர்க்கப்பட்ட உதாரணவெண்பாக்களினின்றும் அம்மொழிபெயர்ப்பு அநபாயன்காலம் என்றுசொல்லலாம் என்பதையும் குறித்தேன். பிரயோகவிவேக ஆசிரியரின் குறிப்பும் 'தமிழில் மொழிபெயர்த்தவர் தண்டியாசிரியராகவே இருக்கக்கூடும்' என்பதற்கு ஆதாரமாகும் என்பதையும் காட்டினேன். ஆயினும், அநபாயன்பெயர் காவ்யாதர்சத்து வழங்கிய இடங்கள் என்வசமுள்ள இரண்டு அச்சுப்பிரதிகளாலும் துலங்கவில்லை.

ஆகவே, ஐயரவர்கள், மேலே பொதுவாகக்குறித்துச்சொல்லிய இடங்களை விளக்கமாக எடுத்துக்காட்டினால், தண்டியாசிரியர்காலத்தை நிர்ணயிக்க முயன்றுவரும் என்போன்றவர்க்கும் பிறஆராய்ச்சியாளர்க்கும் சிறந்த பேருதவியாகும்.

வே. நாராயணன்.

# மதிப்புரை.

லெக்ஸிகன் தமிழகராதி:-இதன் இரண்டாவததொகுதியின் மூன்ருவதுபகுதி வெளிவந்துவிட்டது. அதில் 'கு' என்ற சொல்முதல், 'கைம்முதல்' என்ற சொல்வரை சொற்களும் பொருள்களும் ஏற்பட்ட முறைப்படி நன்கு யெழுதப்பட்டுள்ளன. 953-ம் பக்கம் முதல், 1112-ம் பக்கமளவும் 160 பக்க மடங்கிய இப்பகுதியின் விலை மட்டும் இரண்டு ரூபா ஏற்பட்டிருக்கிறது. வேண்டுவோர் சென்னை யூனிவர் ஸிட்டி லெக்ஸிகன்ஆபீஸிற் பெறலாம்.

---

தமிழின்தற்காலநிலைமை:—இது, 'விசாலஹிருதயம்' பத்திரிகாசிரியரான திருவாளர் ராமசுப்பிரமணியநாவலரவர்களால் எழுதப்பட்டது. இதில், தமிழின் உயர்வையும், அதன் தற்காலநிலைமையையும், அதன் இன்றியமையாமையையும், அதனைப்புரக்கவேண்டியவழி முதலியவைகளையும்பற்றிய பலவிடயங்கள் உபந்யாசரூபமாக நல்லதமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளன. இதன் விலை அணு 6. வேண்டுவோர் ஆக்கியோர்க்கு எழுதிப் பெறலாம்.

---

திருமுருகாற்றுப்படைச்சிற்றுராய்ச்சி:-இது, தஞ்சாவூர் பென்ஷன் டிப்டிகலெக்டர் ராவ்பகதூர் எம். ஆறுமுகம்பிள்ளையவர்களாலியற்றப் பெற்றது. திருமுருகாற்றுப்படையென்பது சங்கமருவியசான்றோருட் சிறந்த நக்கீரதேவரா லியற்றப்பட்ட தெய்வப்பாடலாயுள்ளது. பழமை வாய்ந்த தெய்வப்பாடல்கள்பலவும் அறிதற்கரிய உள்ளுறைப்பொருள்களை யுடையனவாயுள்ளன. இதனை, திருக்கோவையாருரைப்பாயிரத்தானும், "திருக்கோவை (யை) யெழுதிக்கொளினும் நந்தாவுரையை யெழுதலெவ்வாறு நவின்றருளே" என்ற ஆன்றோர்வாக்கானும் அறியலாம். அன்றியும், 'நவில்தொறும் நூல்நயம்போலும்' என்பதனல் ஆராயுந்தோறும் புதுவதுப்புதுவதாகப் பொருள் தோன்றுமியற்கையும் அரியநூல்களுக் குளதாமென்பதும் விளங்கும். அப்பொருளெல்லாம் நம்மனோரா லாராய்ந்து முழுதும் அறிதல் அரிதேயாயினும், நூலில் அநவரதசிந்தனையும் கடவுளிடத் தன்பும் அகந்தூய்மையுமுடையாயினர்க்குப் பல நுண்ணியபொருள்கள் புலப்படாதனவல்ல. இவ்வாற்றுப்

படையாராய்ச்சியாற் சிவபெருமானுக்குப் பஞ்சபூதஸ்தலங்களுள்ளன போலவே முருகக்கடவுளுக்கும்பஞ்சபூதஸ்தலங்களுண்டென்றுகாட்டப் பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் இன்னதென்று சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்முதலிய பலநுணுகிய குறிப்புக்களாலறிவிக்கப்படுகின்றன. இக்கருத்து அந்நூலுரைகளிற் புலப்பட்டிலதாயினும், அந்நூலியற்றி யருளியநக்கீரதேவர்க்கு உடம்பாடன்றென்றுகொள்ளற்கிடமில்லை. அவர் பேரறிவுடைமையால், 'சுவை யொளி யூறோசை நாற்றமென் றைந்தின் வகைதெரிவான்கட்டேயுலகு' என்பதுபற்றித் தத்துவப்பொருள்களின் கூறுபாடாகவே எல்லாப்பொருள்களையும் காண்பவராகலின் வீடுதரவல்ல கடவுள் பிருதிவிமுதலியவற்றில் வியாபித்திருப்பவர் என்பதை உள் ளுறுத்துக்கூறற்பாலரே. இவ்வுள்ளுறைப்பொருளுக்கு வேண்டும் குறிப்புக்கள் பலவும் இவ்வாராய்ச்சியுள் நுணுகியறியுமாறு காட்டப் பட்டன. அவைகொண்டு உற்றுநோக்கும்போது இவ்வுரை மிகவும் பொருத்தமுடையதாகவே தோன்றுகின்றது.

இதனை இயற்றிய பிள்ளைபவர்களின் தெய்வபக்தியும், புராதனக் கொள்கையிற் பற்றுடைமையும், திருமுருகாற்றுப்படையிற் சிறந்த சிந்தனையும், பாராட்டத்தக்கன. இதன் விலை அணா 6.

---

தமிழ் அமைப்புற்றவரலாறு:-இது, நல்லூர் ஸ்ரீமத் ஞானப்பிரகாச ரவர்களால், சொற்களின் உண்மைப்பிறப்பைவிளக்கும் ஒரு புதிய நூலாக எழுதப்பட்டிருக்கிறது.

இதில், பத்து அதிகாரங்களால் மொழிகளின் தோற்றமும் வளர்ச்சியும் ஒருவாறு ஆராய்ந்து காட்டப்பட்டுள்ளன. இந்நூல் தமி ழில் மொழிநூலாராய்ச்சி முளைத்துக் கிளைத்தற்கு விதைத்த விதை போல் விளங்குகின்றது.

தமிழ்ச்சுட்டெழுத்துக்களே முதலில் இடம்பற்றிப் பிறபொருட் பெயர்களாகி, பின்பு அவற்றின் வண்ணம் வடிவம் முதலிய பண்புபற்றிப் பலமொழிகளின் உற்பத்திக்கு மூலமாய்நின்றனவென்று காட்டப் படுகின்றன.

உலகில் ஆக்கப்படும்பொருள்கட்கெல்லாம் அவற்றின் நுண்ணுருப் பாகிய அணுக்கள் ஆற்றலோடுகூடியே காரணமா யமைந்துகிடப்பன

போலவே ஆக்கப்படும் மொழிகளுக்கும் அவற்றின் நுண்ணுறுப்பாகிய எழுத்தொலிகள் ஆற்றலோடுகூடியே காரணமா யமைந்துகிடத்தலும் இயல்பேயாம்; இதனை, மொழிப்பொருள்களுக்கெல்லாம் முதன்மையுள்ள பரம்பொருளை, மொழிகளுக்கெல்லாம் முதன்மையுள்ள அகரம் உணர்த்தும் என்னும் நம்முன்னோர்கொள்கை மிகவும் ஆதரிக்கின்றது; இதனால், பொருட்டிரிபும் மொழித்திரிபும் தொடர்புடையவா யமையலாமென்றுதோன்றுகின்றது. இக்கருத்தானேநோக்குங்கால் இலை ஓலையாகவும், சடை கிடையாகவும் திரிந்தன எனக் கூறுதற்கு மிடமுண்டு.

அன்றியும், வளைதலுணர்த்தும் 'குட்'என்னும் ஒலியடியாகக் குடி, குடில், குடிசில், குடிசை, குடிகை, குடிலம், குடிலை, குடக்கை, குலுக்கை, குலுமை, குடுவை, குடம், குடம்பை, குடகு, குட்டை, குளம், குழி, குடை, குழை, குழாய், குழல், குடல், குடர், குண்டு, குட்டிமம், கூடு, கூண்டு, கூடை, கூடம், கூடாரம், கொடுமை, கொடி, கொடுக்கு, கொக்கு, கொக்கி, *கோடு, கோட்டை, கோட்டம், கோண், கோணல், கோணம், கோணை, † குணக்கு, குணக்கம், குடக்குமுதலியபலசொற்கள் தோன்றுகின்றமையாலும் சொற்பொருட்டிரிபுகள் கொள்ளற்பாலனவே.

தொன்றுதொட்டே இடப்பெயர்களுக்கும் பிற பொருட்பெயர்களுக்கும் இயைபுண்டென்பதும் கொள்ளற்பாலதே. இதனை, கண் கால் கடை இடை தலை வாய் முன் பின் உள் அகம் புறம் இடம் வலம் என்பவை இடப்பெயர்களாயும், உடலுறுப்புப்பெயர்களாயும் இருத்தலால் அறியலாம். இடமடியாகப் பொருள் தோன்றிற்றென்பதற்கு இதுவும் சாதகமாகலாம்.

சொற்களின் காரணங்களை ஆராயுமிடத்து 'மொழிப்பொருட் காரணம் விழிப்பத்தோன்றா' என்றதனால், தொல்காப்பியனாரும் சொற்களுக்குக் காரணமுண்டென்றே கருதினர். ஆயினும், மொழிகள் தோன்றிய நனி தவ மிகக் கழிகாலத்திருந்து நெடுங்காலமாகத் திரிந்து வந்த திரிபெல்லாம் அவர்காலத்திலேயே நன்கு விளங்கவில்லையென்றமையால் அவை இக்காலத்து மிகுதியும் புலப்படாவென்பது சொல்லாமலேஅறியலாம். ஆயினும், நுண்ணுணர்வாலாராய்வார்க்கு ஒருசில திரிபுகள்புலப்படத்தக்கன. அவைபோலப் பிறசொற்களுக்கெல்லாம்

*கோடு - சங்கு, கரை, குளம், மலை, கொம்புவகை. †குணக்கு - வளைவு, கிழக்கு.

காரணம்சொல்லக்கருதின், பலபடியாகக் காரணத்திரிபுகள் கற்பிக்கப் படுவனவாம். அக்கற்பிக்கப்பட்டவற்றுள்ளும் ஒருசில உண்மையாயமைய லாம். வேறு பல தவறுயுமிருக்கலாம்.

இத்தகைய ஆராய்ச்சிக்கு மூலகாரணமாக இந்நூலுட்காட்டப் பட்ட சொற்றிரிபுகள் பெரும்பாலும் பொருந்துவனவே. ஒருசில பொருந்தாதனபோலத் தோன்றுமாயினும், 'நீர்' 'உம்' என்றும், 'ஒன் பது + நூறு' 'தொள்ளாயிர'மென்றும், 'யுஷ்மத்' 'த்வம்' என்றும், 'அஸ் மத்' 'அஹம்' என்றும் திரியுமெனக்கொள்ளும் வழக்குநூல்வல்லார்க்கு அவை விலக்காகா; ஆயினும், தொல்லாசிரியர் துணிபிற் பிறழாது பொதுநோக்குள்ளபுலவர்களாற் பொருந்துமெனப்படுவனவே எல்லோரா லும் கொள்ளத்தக்கனவாம்.

கூரிய நுண்ணுணர்வும், பலதேயமொழிப்பயிற்சியும், தொன்று தொட்ட வழக்குவழிப்பாடும், தமக்கென ஒருகோட்பாடின்மையும் உள்ள பண்டிதர் பலரும் பன்முறையாராய்ந்து முடிவுசெய்யத்தக்க இப்பெரு முயற்சியில் முதலிற்புகுந்து ஒருவாறுக வழிகாட்டிவரும் ஸ்ரீமத். ஞானப்பிரகாசரவர்களுடையமதிநுட்பமும், கல்வித்திறமையும், கற்பனு சக்தியும், ஊக்கமும், உழைப்பும், தமிழபிமானமும் பாராட்டத்தக்கன.

பலவாற்றுன் வரலாறு கூறுதற்குரிய நிலையிலுள்ள சொற்களை யாராய்ந்து உண்மையான வரலாறு இதுவென வுணர்ந்துரைத்தல் அரி தினும் அரிதேயாம். ஆயினும், இந்நூலுட் சற்றேறத்தாழ ஐந்நூறு சொற்களுக்கு மிகவும்பொருந்துவதாக வரலாறுகாட்டப்பட்டிருக்கிறது.

ஒருமுறை இருமுறையன்றிப் பலமுறையாராய்ந்து திருத்தமடைய வேண்டிய இப்பெரியகாரியத்தில் ஒருசிலதவறுகள்காணப்படினும் அவற் ருன் இம்முதன்முயற்சி இகழ்ச்சியடையாது முன்னிற்கத்தக்கதே.

இவ்வாராய்ச்சி முற்றுப்பெறுங்காலத்தில் தமிழின் அமைப்பு எனப்படாது தமிழின் அமைதி யென்றே முடியுமென்றும், வடமொழி தென்மொழி முதலிய பலமொழிகளும் ஒருமூலையின்கிளைகளா யமையு மென்றும் தோன்றுகின்றது.

தமிழ்மொழியினும் சொற்பிறப்பாராய்ச்சி யெழுதத்தக்கதென்று முயன்று செய்துகாட்டிய இந்நூலாசிரியர் இவ்வாராய்ச்சியைத் தொடர்ந்து பலபுத்தகங்களாயெழுதிவெளியிடுமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

ஒரு நாட்டுப்புரத் தேவாலயமுற்றத்தில் எழுதப்பட்ட

# இ ர ங் க ற் பா.

("Elegy written in a country Church yard").

[கிறே (Gray) என்னும் ஆங்கிலப்புலவரால் இயற்றப்பட்டது.]

உ௭அ-ம் பக்கத் தொடர்ச்சி.

17. இன்னியல் வளங்கண் மேவு மிந்தநன் னாட்டி னூடே
நன்னலஞ் சேரும் தன்செய் காத்தலை நாடி வீரந்
தன்னொடு மெதிர்ந்து நின்ற தகைபெறு காம்ப்டன் (Hampden) னாக
மன்னிய வீர ரிங்கு வாழ்ந்திருந் தாரு மாவர்.

18. தேசொன்று மில்லா ராகி மௌனமாந் திறத்தை யுற்ற
மாசறு மில்டன் (Milton) னாக வாழ்ந்திருந் தாரு மாவர்
தேசத்தின் குருதி யாலே கொடுமையாந் திறம்பெ றாத
ஆசிலாக் குறம்வெ (Cromwell) லாக வாழ்ந்திருந் தாரு மாவர்.

19. மேன்மைசே ரவையார் கூறும் வியப்புரை தனைக்கேட் டற்கும்
ஊனமாந் துன்பந் தன்னு லழிவினு லுறுதற் பால
தானபே ரிகழ்வி னுக்கு மழகிய நாட்டி னூடே
யீனமில் வளங்க ளாக்கு மியல்பொடு மேவு தற்கும்.

20. தமதுசீர்க் காதை தன்னைத் தகைபெறு நாட்டார் கண்ணி
னமைவுறக் கண்டே தேரு மதனுக்கு மந்த நாட்டார்
தமதுகி ணிலைமை தானே தடையதாய் மருவி யின்னோர்
தமதுயர் கீர்த்தி சான்ற மேன்மையைத் தகைந்த தன்றே.

21. இந்நிலை யிவர்தம் மாண்பைத் தகைந்ததா னூ மின்னோர்
புன்னிலை யுறாத வண்ணம் புரந்தது மிதுவே யாகும்
இன்னுமிந் நிலைதா னின்னே ரெழில்பெற மேவுஞ் செம்மை
மன்னிய குருதி வெள்ள வழிக்கொடு தவிசின் மேவும்.

22. அந்நிலை தனைத்த கைந்த தன்றியு மனித வாழ்வின்
மன்னிய விரக்க மாகும் வாய்தலின் கதவ மூடும்
புன்னிலை தனையி யல்பிற் பொருந்துநாண் போக்க றன்னைத்
துன்னுமெய் மறைக்குங் காலைச் சூழ்ந்திடும் வியாகு லத்தை.

23. வையமேற் பெருமை பெற்ற வாழ்வினோர் வாயி லூற்றே
செய்யதம் மறிவென் றோதுஞ் சீர்செறி தூபந் தன்னை
மெய்பெற வியற்று மந்த வீண்செய வியற்ற றன்னைச்
சையமேற் றகைந்தே யின்னோர் தங்களைப் புரந்த தன்றே.

24. நலம்பயில் வாழ்வின் மேவா நகரத்தார்க் கதிசேய்த் தாக
வலந்தரு மமைதி சான்ற வாழ்வினை நயந்தா ராகித்
துலங்குமவ் வாழ்க்கை யென்னுந் தூய்மைசேர் வெளியி னூடே
புலங்கொளு மோசை யற்ற போக்கினைப் பொருந்தி னரே.

[தொடரும்]

ந. பத்மாவதி.

உ.

# திருப்புறம்பயத்துக் கல்வெட்டுக்கள்.*

## I

அரசன்:—ஆதித்தன்.

இடம்:—கர்ப்பக் கிருகம், தென்புறம் யாளிதாங்கித்துமேல்.

(1) வஸ்திக்குயாண்டு

(2) பத்தாவது

(3) இத்தேவர்

(4) க்கு மயக்கி....கிழா

(5) தித்தனர் ஏரா (ள்)

(6) ம் யாற்றுவடகரை அண்டாட்டுக் கூற் |

(7) றத்துப் திருபுறம்பியமுடைய ம

(8) ஹாதெவர்க்கு கண்டன்மாதேவிவைத்த

(9) திரு நொந்தாவிளக்கு; இதுக்குக் † கோற்றவன்குடியி

(10) லேகுடுத்தநில மூன்றுமா—

---

* ஒவ்வொரு அரசருடைய கல்வெட்டும் தனித்தனி ஒவ்வோரிடத்தில் வரிசையாகப் பொறிக்கப்படுவது பண்டைக்கால மரபு. இங்கும் அவ்வாறே ஒவ்வொரு அரசருடைய கல்வெட்டும் தனித்தனி ஒவ்வோரிடத்தில் வரிசையாகப் பொறிக்கப்பட்டிருத்தல் காணலாம்.

† கொற்றவன்குடி திருப்புறம்பயத்தையடுத்துள்ளது. இந்நிலம் இப்பொழுதும் இவ்வூர்ப்பொதுவாக இருப்பதாகவும், அதன்வருமானத்தில் ஒரு பகுதி திருப்புறம்பயமுடையநயினர்க்குக் கொடுத்துவரப்படுவதாகவும் இவ்வூரிலுள்ள முதியோர்சிலரால் அறியக்கிடக்கின்றது.

II

அரசன்:—பராந்தகன்.

இடம்:— I-வது கல்வெட்டுக்குக் கீழ்புறம்.

(1) ஸ்வஸ்திஸ்ரீ மதி (து)

(2) ரைகொண்ட கோ

(3) ராஜகேசரிவம்மக்கு யாண்டு

(4) ௰௬ வது திருப்புறம்

(5) பியமுடையபட்டாலகர்க்கு

(6) கு (கொ) டுத்த ஊத்த உப [?] என்னால்

(7) நொந்தாவிளக்கு ஒன்று

(8) க்கு ஹூதம் உழக்கு நெறு

(9) ட்டக்கடவான் நக்கன். தனீ [?]

(10) மனுஸ்ய [?] ஸ்ரீ கோபர

(11) கேசரிவம்ம(க்கு)யாண்டு ௰ ஆவதுத் திருப்புறம்பியமுடைய

(12) பட்டாலகர்க்கு மன்றாடி நக்கன்

(13) தாம் நற்றுதித்தவர்வை

(14) த்தவிளக்கு............று—அரைக்கும் ஆ

(15) டு ௯௰ நால் ஹூதம் ஆழ [ா] க்கு

(16) அட்டக்கடவான்

(17) கௌசிகநல்

(18) கு ஹூளதிகள்

(19) கொற்றன் ||

(20) ஸ்ரீமதிளிலே நோண்டிணர் பரகேசரிவம்மக்கு யாண்டு உ௰-
வது திருப்புறம்பிய முடைய

(21) ஊட்டாலகர்க்கு•நாட்டு மன்றாடிகள் வைத்த நொந்தாவிளக்கு ஒன்று [றி] நிக்கு

(22) நிசதம் உழக்குக்கு வைத்தது ஆடு ௰. நெய் அட்டக்கடவான் கழயன்

(23) பரதேவன் ஸ்ரீ மதிரைகொண்ட கோ பரகேசரி வம்மக்கு யாண்டு உ௰

(24) ஆவது திருப்புறம்பிய முடைய ஊட்டாலகர்க்கு நாட்டு மன் றாடிகள் வை

(25) த்த நொந்தாவிளக்கு நிசதம் உழக்கு நெயிக் (கு) வைத்த ஆ

(26) டு ௩௫ வைத்தல் [?] அட்டக்கடவான்

* * * * * * *

---

## III A.

**அரசன்:—இராஜராஜன்.**

**இடம்:—II-வது கல்வெட்டுக்குக் கிழக்கே கணபதி, மன்றடி, பிக்ஷாடனர் உருவங்களின் கீழ்.**

(1) ஸ்வஸ்திஸ்ரீ *திரு ாகள்போல பெருநிலச்செல்வியும் தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி கங்கை பாடியும் நுளம்ப பாடியும் தடிகை பாடியும் குடமலைநாடும் கொல்லமும் கலிங்கமும் திண்டிறல் வென்றித்தண்

(2) டாற்கொண்ட தன் னெழில்வளரூழியில் யெல்லாயாண்டும் தொழுதகை விளங்கும் யாண்டே செழியரைத் தேசுகொள் கோ இராஜ கேசரிவம்மர்க்கு யாண்டு பத்தாவது; வடகரை அண்டாட்டுக் கூற்றத்து திருப்புறம்பியத் தாடியாளுகிற

(3) † கூத்தபெருமான் உடைய நம்பிராட்டியார் திருப்பள்ளிக் கட்டிலுக்கு இவ்வூர் வளஞ்சியர் வைத்த நொந்தாவிளக்கு; இவை பற்

---

* கல்வெட்டிலுள்ளபடி யெழுதியிருப்பதால் இம்மெய்க்கீர்த்தி அகவற் பாவாக அடிபிரித்துக் காட்டப்படவில்லை.

† கூத்தபெருமான் - ஸ்ரீநடராஜப்பெருமான். உடையநம்பிராட்டியார் - சிவகாமிநாச்சியார்.

றுக்கு பழையவாக வின மாதேவி நிலம் வானவன் மாதேவி நதிக்குக் கிழக்கு, ராஜேந்திரிவாய்க்காலுக்கு மேற்கு நின்று

(4) சம்மதித்து கையோலை செய்து கொடுத்தோம், தேவகன்மிகளேம்; இவை கோயில்கண்மிக்கு புறம்பிய உடையான் * பிரளயன் எழுத்து இது மஹேசுரசாட்சி.

---

## III B.

இடம்:—III A சாசனவரி 3 க்கும் 4 க்கும் இடையில்.

(1) ஸ்வஸ்திஸ்ரீ யாண்டு பதிமூன்றுவது உடையார் திருப்புறம்பியம் உடையார் ராஜ்ப தைத்திருநாளிலும் பங்குனித்திருநாளிலும் திருவேட்டையு மதிகவி (ம) ண்டபம் எழுந்தருள அமுது செய்கைக்கு அரிவாட் தாயனு

(2) ன அரையன் தேவனும் சிறுத்தொண்டனும் சண்டேசுவானும் இயற்பகையும் கோட்புலியாரும் விறன்மிண்டனும் † அணுக்க நம்பியும் நிவந்தங்கட்ட திருத்தின நிலத்துக்கு கையோலை பு

(3) றம்பியத்து மூத்தூர்கூற்றில் உடுங் கூறு எடுத்துக்கொள்ள குழி சூ ஆனதாய் விரட்டி (2 பங்கு) இது கொல்லை குளத்தாத்தினல் நெல் இறுக்கக்கடவேனுக; இந்நெல் முக்கல(ம்) இறுத்து காசி(சு) இறுக்க கடவதாகும்.

குறிப்பு:—திருப்புறம்பயத்திற் பலதிருப்பணிகளியற்றியவன் அரிந்துவஜன் என்னும் அரசனுவான். இவனது செப்புச் சிலையொன்று சில ஆண்டுகட்கு முன்னர் நிலத்தினின்றெடுக்கப்பட்ட மற்றைச் சிலைகளோடு வைக்கப்பட்டுள்ளது. அது தலையில் முடியும் தோளில் வாகுவலயமும், கையில் புஷ்பக் கொத்தும், காலில் வீரக்கழலும் உடையதாய் அழகமைய வார்க்கப்பட்டுளது.

இலக்கணவிளக்கம் வைத்தியநாததேசிகர்பாம்பரை

திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்.

---

* பிரளயன் என்பது இந்நிலம்விட்டவன்பெயர். இத்தலத் தெழுந்தருளியுள்ள விநாயகமூர்த்தியின் திருநாமம் பிரளயகாலப்பிள்ளையார் என்பது. [இதனைப் பற்றிப் பின்ன ரெழுதுவாம்.]

† அணுக்கநம்பி - நம்பியாரூரர்.

## 1927-ஞு ஆகஸ்டு௴ 20௳ (பிரபவ-ஞு ஆவணி௴ 4௳)
## காலை 9 மணிக்குக் கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

—⟨(o)⟩—

1. மகா-௱-௱-ஸ்ரீ: S. சோமசுந்தரபாரதியவர்கள், M.A., B.L.
அக்கிராசனம்வகித்தவர்.

2. ,, N. R. கிருஷ்ணஸாமிஐயங்காரவர்கள், B.A., B.L.

3. ,, V. S. ராமஸ்வாமி சாஸ்திரியவர்கள், B.A., B.L.

4. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், B.A., B.L. M.L.C.

இவர்கள் வந்திருந்தார்கள்.

### தீர்மானங்கள்.

I. 1926-ஞு டிசம்பர்௴ முதல் 1927-ஞு ஜூலை௴ முடிய உள்ள சங்கம் வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

II. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக் கோரிய அடியிற் குறித்துள்ளவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

(1) மகா-௱-௱-ஸ்ரீ ரா. சாமிராஜு அவர்கள், தமிழ்ப்பண்டிதர், இராமநாதபுரம்.

(2) ,, தா. க. தாயுமானபிள்ளை அவர்கள், மேல்மங்கலம், வடுகபட்டிபோஸ்டு, பெரியகுளம்தாலுகா.

(3) ,, பண்டித R. P. அமிர்தலிங்கம்பிள்ளை அவர்கள், தலைமைப்போதகாசிரியர், சன்மார்க்கசபை, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டை ஸ்டேட்.

(4) ,, S. K. சுப்பிரமணியபிள்ளை அவர்கள், மானேஜிங் டைரெக்டர், Continental Provident Insurance Society, No. 24, தெற்குச்சித்திரைவீதி மதுரை.

(5) ,, தொண்டி. வெ.லெட்சுமணன்செட்டியார் அவர்கள், தொண்டியார்வீடு, தேவகோட்டை.

(6) ,, தம்பி K. சிவகுருபிள்ளை அவர்கள், Landlord & Elected member of the Excise Advisory Committee, புத்தூர், யாழ்ப்பாணம்.

(7) ,, மூ. சதாசிவம் அவர்கள், தமிழ்த்துவிபாஷிகர், டிஸ்டிரிக்ட்கோர்ட், Miri, Sarawak, (via) சிங்கப்பூர்.

III. புதுக்கோட்டை மஹாராஜாகாலேஜ் தலைவர் அவர்கள், சங்கத்துக்கு வந்திருந்தசமயம் காலேஜ் உபயோகத்துக்காகச் சங்கப்பிரசுரங்களை இனமாக அளித்தது அங்கீகரிக்கலாயிற்று.

IV. சங்கத்தின் 1926—1927-ம்ஞுத்திய வருஷாந்தக்கணக்குகளைப் பரிசோதனைசெய்வதற்கு மதுரை ஹைக்கோர்ட்டுவக்கீல் மகா-ஙா-ஙா-ஸ்ரீ V. சுந்தரமையர் (B.A., B.L.) அவர்களை ஆடிட்டராக நியமிக்கலாயிற்று.

V. சங்கம் தமிழ்வித்வான்களான ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்களும், ம. கோபாலகிருஷ்ணையரவர்களும் காலஞ்சென்றதற்குச் சங்கம் மிகுந்த அனுதாபம் பாராட்டுகிறது.

VI. தமிழ்ச்சங்கமுத்திராசாலைக்கு ஸூப்பிரண்டெண்டு ஒருவரை அவசரமாக நியமிக்கவேண்டுமெனத் தீர்மானிக்கலாயிற்று. அந்த ஸூப்பிரண்டெண்டையே சங்கக்கட்டிடவேலைகளையும் மேற்பார்க்கச்செய்யலாமென்றும் தீர்மானிக்கலாயிற்று.

VII. செந்தமிழ்ப்பழையபிரதிகளைத் தொகுதி ஒன்று ரூபா நான்குக்கு விற்கவேண்டுமெனத் தீர்மானிக்கலாயிற்று.

மதுரை,
20—8—1927.

S. S. பாரதி,
அக்கிராசனம்வகித்தவர்.